இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in — நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி — murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 137 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 11 – புதன்கிழமை 27 டிசம்பர் 2023 – வெளியீர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 137 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 11 - Wednesday 27 December 2023 - Dak 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 155.42 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1000 புதிய வகுப்பறை கட்டடங்கள், மாநிலத்தின் 21 மாவட்டங்களில் 20.54 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 50 கிராம ஊராட்சி செயலகக் கட்டடங்கள், மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 24.39 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 102 ஊராட்சி மன்றக் கட்டடங்கள் மற்றும் 15.46 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் இ.பெரியசாமி, ஆர்.காந்தி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், பள்ளிக் கல்வித் துறை செயலாளர் ஜெ. குமரகுருபரன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா. பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2023) தலைமைச் செயலகத்தில், உள் (போக்குவரத்து) துறை சார்பில் தமிழ்நாட்டிலுள்ள 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 54 மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகங்கள், என மொத்தம் 145 அலுவலகங்களில் ஓட்டுநர் தேர்வு நடத்தும் பொருட்டு 6 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 145 இலகு ரக மோட்டார் கார் வாகனங்களை வழங்கிடும் வகையில் 3 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையர் அ. சண்முகசுந்தரம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மக்களாட்சியின் மாண்பினை கிராம அளவில் உறுதி செய்திட

# ஊராட்சித் துறையில் ரூ.215.81 கோடியில் புதிய கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, டிச. 27 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 155.42 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1000 புதிய வகுப்பறை கட்டடங்கள், மாநிலத்தின் 21 மாவட்டங்களில் 20.54 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 50 கிராம ஊராட்சி செயலகக் கட்டடங்கள், மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 24.39 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 102 ஊராட்சி மன்றக் கட்டடங்கள் மற்றும் 15.46 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதார வசதிகள், சாலை வசதிகள், பாலங்கள் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதத்தில், பழுதடைந்த ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வாயிலாக அரசு செயல்படுத்தி வருவதுடன், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், பெரியார் நினைவு சமத்துவபுரம், முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் போன்ற புதுமையான ஊரக வளர்ச்சி திட்டங்களையும் இவ்வரசு வகுத்து, அனைத்து தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தி வருகிறது.

**குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடங்களை திறந்து வைத்தல்!**

முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவை விதி எண் 110ன் கீழ், ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு சுமார் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6000 புதிய வகுப்பறைகளும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுமார் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1200 வகுப்பறைகளும், என மொத்தம் 1050 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7200 வகுப்பறைகள் நடப்பாண்டிலேயே கூடுதலாகக் கட்டப்படும் என்று அறிவித்தார். அதன் அடிப்படையில்

2022-23ஆம் ஆண்டில் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,653 புதிய வகுப்பறைகள் கட்ட அரசாணை வெளியிடப்பட்டது. இத்திட்டம் “குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்” என்று ஊரகப் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கட்டடங்கள் அனைத்தும் குழந்தை நேய சிறப்பு அமைப்புகளான உயர்த்தப்பட்ட மேற்கூரை, விசாலமான தாழ்வாரம், காற்றோட்டமிக்க ஜன்னல் வசதிகள், வழுக்காத தரைகள், கற்றலை ஊக்குவிக்கும் சுவர் ஓவியங்கள், வாழ்க்கைப் பாடங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக தமிழ்நாட்டின் 37 மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கட்டி முடிக்கப்பட்ட 1000 வகுப்பறைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 26.09.2023 அன்று திறந்து வைக்கப் பட்டது.

**34 மாவட்டங்களில் 1000 வகுப்பறைகள்!**

தற்போது, நேற்று இரண்டாம் கட்டமாக மாநிலத்தின் 34 மாவட்டங்களில் 155.42 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1000 தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி வகுப்பறைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

**50 கிராம ஊராட்சி செயலகக் கட்டடங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்பு செயலாக்கம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 22.4.2022 அன்று சட்டப்பேரவை விதி எண் 110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், கிராம அளவில், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் வருவாய்த் துறைக்கு மட்டுமே அலுவலகங்கள் தனித்தனியே செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், பிற துறைகள் மூலம் கிராமங்களில் செயல்படுத்தப்படக்கூடிய திட்டங்களை ஒருங்கிணைத்து, அதனைக் கண்காணிக்க கிராம அளவில் வசதிகளை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே, உள்ளாட்சியில் நல்லாட்சி என்ற நோக்கத்துடன், மக்களாட்சியின் மாண்பினை கிராம அளவில் உறுதி செய்திட ஏதுவாக, ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை மற்றும் சமூக நலத் துறைபோன்ற முக்கியதுறைகளின்மூலம் செயல்படுத்தப்படக்கூடிய அரசின் பல்வேறு திட்டங்களை கிராம அளவில் ஒருங்கிணைத்து செவ்வனே செயல்படுத்திட 600 ஊராட்சிகளில் “கிராமச் செயலகங்கள்” கட்டப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

அதனடிப்படையில், கிராம ஊராட்சி அலுவலகம் மற்றும் கிராம நிர்வாக அலுவலகம் ஒரே கிராமத்தில் அமையப்பெற்று இருப்பின், அவற்றை முதன்மைப்படுத்தி

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

### முதல்வரின் சீரிய நடவடிக்கையால் நடப்பு நிதியாண்டில்

## தமிழ்நாட்டில் உள்நாட்டு உற்பத்தி ரூ.28 லட்சம் கோடியாக உயர்வு!

### வளர்ச்சி விகிதம் 11.66 சதவிகிதமாக உயர்ந்து சாதனை!

*சென்னை, டிச. 27 -*

*தி.மு.க. அரசு பொறுப்பேற்ற கடந்த இரண்டு ஆண்டுகளில் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது புதிய மற்றும் விரிவாக்க திட்டத்திற்கான முதலீடுகளை தமிழ்நாட்டில் மேற்கொண்டுள்ளன.*

*2030க்குள் 1 லட்சம் கோடி டாலர் பொருளாதாரமாக மாற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொலைநோக்கு சிந்தனைகளுடன் செயல்படுத்தி வரும் பொருளாதாரம் சார்ந்த முன்னெடுப்புகள் தொழில்துறையில் பல்வேறு சாதனைகளை படைத்து வருகின்றன.*

*டிட்கோ நிறுவனம் பெரும் முதலீடு மற்றும் அதிக வேலை வாய்ப்புகளை அளிக்கக்கூடிய பெரிய தொழில் மற்றும் உட்கட்டமைப்பு திட்டங்களை மாநிலத்தில் நிறுவ வழிவகை செய்து வருகின்றன.*

*அதேபோல், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், புதிய தொழில் நிறுவனங்கள் அமைப்பதற்கும் ஏற்கனவே இயங்கிவரும் நிறுவனங்களை விரிவுபடுத்துவதற்கும், நவீனமயமாக்குவதற்கும் நிதியுதவி அளிக்கிறது. இதில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு மொத்த நிதியில் 40 சதவீதம் நிதி பங்களிப்பு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 18 ஆண்டுகளாக லாபத்தில் இயங்கி வரும் இந்த கழகம், இதுவரை 1.27 லட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு நிதி உதவி வழங்கியுள்ளது.*

*இதுமட்டுமின்றி, சிப்காட், டான்சிட்கோ போன்ற நிறுவனங்களும் தமிழ்நாட்டில் தொழில் சார்ந்த வளர்ச்சிக்கு மிகப்பெரிய அரணாக திகழ்ந்து வருகின்றன. அந்தவகையில் 2023-24க்கான மதிப்பீட்டின்படி தமிழ்நாட்டின் உள்நாட்டு உற்பத்தி 28.3 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. ஒட்டு மொத்தமாக ஆண்டு வளர்ச்சி விகிதம் 11. 66 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.*

*இந்நிலையில், ஜனவரி மாதத்தில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர் மாநாடு மூலம், மாநிலத்தின் பொருளாதாரம் மேலும் அதிகரிப்பதுடன், ஏராளமான வேலைவாய்ப்புகளும் ஏற்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.*

---

### மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களுக்கு

# ரூ.6.25 கோடியில் 145 இலகுரக வாகனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, டிச. 27 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2023) தலைமைச் செயலகத்தில், உள் (போக்குவரத்து) துறை சார்பில் தமிழ்நாட்டிலுள்ள 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 54 மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகங்கள், என மொத்தம் 145 அலுவலகங்களில் ஓட்டுநர் தேர்வு நடத்தும் பொருட்டு 6 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 145 இலகு ரக மோட்டார் கார் வாகனங்களை வழங்கிடும் வகையில் 3 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு :–

போக்குவரத்துத்துறை அலுவலகப் பணிகளான பழகுநர் மற்றும் ஓட்டுநர் உரிமங்கள் வழங்குதல், புதிய வாகனங்கள் பதிவு செய்தல், போக்குவரத்து வாகனங்களுக்கான தகுதிச்சான்றிதழ் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல், வாகனங்களுக்கான சாலை வரிகளை வசூலித்தல், வாகன தணிக்கை போன்ற பல்வேறு பணிகளை சிறப்பாகவும், துரிதமாகவும் மேற்கொள்ளவும், பொது மக்கள் சிரமமின்றி போக்குவரத்துத் துறை தொடர்பான சேவைகளை பெறவும், புதிய பகுதி அலுவலகங்களை தோற்றுவித்தல், பகுதி அலுவலகங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துதல், ஓட்டுநர் தேர்வுத்தள வசதிகளுடன் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் உள் (போக்குவரத்து) துறை வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஓட்டுநர் தேர்வு!**

2023–2024 ஆம் ஆண்டிற்கான உள் (போக்குவரத்து) துறை மானியக் கோரிக்கையில், இலகு ரக வாகன ஓட்டுநர் உரிமம் (LMV CAR) பெற விரும்பும் பொதுமக்களில் பெரும்பாலானோர் சொந்த வாகனம் இல்லாத காரணத்தால், ஓட்டுநர் உரிமம் பெறும் பொருட்டு, ஓட்டுநர் பயிற்சி பள்ளியை அணுக வேண்டிய நிலை உள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு, இனிவரும் காலங்களில் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் / பகுதி அலுவலகங்களில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கான தேர்வு நடத்தும் பொருட்டு, 145 அலுவலகங்களுக்கும் 145 எண்ணிக்கையிலான இலகு ரக மோட்டார் வாகனங்கள் (LMV Car) கொள்முதல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, பொதுமக்கள் நலன் கருதி அரசின் சார்பில் தமிழ்நாட்டில் உள்ள 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 54 மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகங்களை உள்ளடக்கிய மொத்தம் 145 அலுவலகங்களில் ஓட்டுநர் தேர்வு நடத்தும் பொருட்டு 6 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்ட 145 எண்ணிக்கையிலான இலகு ரக மோட்டார் கார் வாகனங்களை வழங்கிடும் வகையில் முதலமைச்சர் அவர்கள் 3 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, போக்கு வரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையர் அ.சண்முகசுந்தரம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 27-12-2023

# துல்லியமாகச் சொன்னார்களா?

“மழை பற்றி 12 ஆம் தேதியே எச்சரித்தபிறகும் தமிழ்நாடு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?” என்று எதுவும் தெரியாத சிலர் கேள்வி எழுப்பி வருகிறார்கள். மழை பெய்யும் என்று சொன்ன வானிலை ஆய்வு மையம், இந்தளவுக்கு மழை பெய்யும் என்று எச்சரிக்கவில்லை என்பதே உண்மை.

“தென் மண்டல வானிலை ஆய்வு மையம் சென்னையில்தான் உள்ளது. இந்த அலுவலகம் சார்பில் தென் மாநிலங்களுக்கான மழை அபாயம் குறித்து 12 ஆம் தேதியே தகவல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் 14 முதல் 16 வரையிலான மழை அறிவிப்பு இருந்தது. இது அதிநவீன மையம் என்பதால் அடுத்த 5 நாட்களுக்கான மழை குறித்து அறிந்து எச்சரிக்கை தருகின்றனர். இது தவிர ஒவ்வொரு 3 மணி நேரத்துக்கும் மழை எச்சரிக்கையும் அளிக்கப்பட்டு வருகிறது. தங்களுக்கு முன்னெச்சரிக்கை கிடைக்கவில்லை என்று கூறுபவர்கள் இதை மனதில் வைப்பது அவசியம். அங்கு டோப்ளர் எனும் 3 அதிநவீன கருவிகள் உள்ளன. மழை பற்றி 12 ஆம் தேதியே அளித்த எச்சரிக்கைக்குத் தமிழக அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன? கனமழை பெய்யும் என்று முன்கூட்டியே எச்சரித்தும் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்கவில்லை” என்று ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் குற்றம் சாட்டி இருக்கிறார்.

டிசம்பர் 12 ஆம் தேதி வானிலை ஆய்வு மையம் என்ன சொன்னது?

நாள்: 12.12.2023 நேரம்: 12:30 மணி வானிலை தகவல்:

**தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.**

*** 12.12.2023: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.**

*** 13.12.2023 மற்றும் 14.12.2023: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.**

*** 15.12.2023: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.**

*** 16.12.2023: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.**

*** 17.12.2023 மற்றும் 18.12.2023: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.**

– இயக்குனர் தென் மண்டல தலைவருக்காக மண்டல வானிலை ஆய்வு மையம், சென்னை - வெளியிட்ட அறிக்கை இது. மதியம் 12.30க்கும் வெளியான அறிக்கை இது. இரவு 7 மணிக்கும், 10 மணிக்கும் வெளியிட்ட அறிக்கையில் ‘கனமழை’ இருக்கும் என்றார்கள்.

* கனமழை என்றால் மஞ்சள்

* மிக கனமழை என்றால் ஆரஞ்ச்

* அதி கனமழை என்றால் சிவப்பு வண்ணத்தில் வானிலை ஆய்வு மையம் செய்தி வெளியிடும். ஆனால் 12 ஆம் தேதி வெளியான அறிக்கையில் சிவப்பு நிறம் இல்லை, மஞ்சளில்தான் வெளியிட்டார்கள்.

நெல்லை, தூத்துக்குடியில் பெய்த மழை அளவு எவ்வளவு?

17 ஆம் தேதியன்று தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் 48 செ.மீட்டரும், திருச்செந்தூரில் 36 செ.மீட்டரும், கோவில்பட்டியில் 36 செ.மீட்டரும் பெய்தது. இதே போல் நெல்லை மாவட்டத்தில் 25 முதல் 35 செ.மீட்டர் மழை பெய்தது.

18 ஆம் தேதி காயல்பட்டினத்தில் 95 செ.மீட்டருக்கு மழை பெய்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையைச் சுற்றியுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 39 இடங்களில் அதிகனமழை பெய்தது. 33 இடங்களில் மிக கனமழை பெய்தது. 12 இடங்களில் கனமழை பெய்தது. நெல்லை மாவட்டத்தில் அதிகபட்சமாக 62 செ.மீட்டர் மழை பெய்தது. தூத்துக்குடி மாவட்டத்தில் சராசரியாக 38 செ.மீட்டர் மழை பெய்தது. இவை வானிலை ஆய்வு மையமே எதிர்பாராதது ஆகும்.

18 ஆம் தேதி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த வானிலை மையத்தின் தென் மண்டலத் தலைவர் பாலச்சந்திரன், **“பொதுவாக புயல், தாழ்வு மண்டலம், தாழ்வுப் பகுதி போன்ற நிகழ்வுகள் வரும் போதுதான் அதிகனமழை இருக்கும். ஆனால் வளிமண்டல சுழற்சி உருவாகி, அதில் அதிகனமழை வரை இப்போது பெய்திருக்கிறது. இது போல் பெய்தது இல்லை”** என்று சொன்னார். (தினத்தந்தி 19.12.2023)

வானிலை ஆய்வு மையம் சொன்னது ‘கனமழை’ மட்டும் தான். ஆனால், பெய்தது - ‘மிக கனமழை’யையும் தாண்டிய ‘அதிகனமழை’ ஆகும். ‘இது போல் பெய்தது இல்லை’ என்று பாலச்சந்திரனே சொல்லி விட்டார்.

சென்னை வானிலை ஆய்வு மையத்தின் முன்னாள் இயக்குநர் எஸ்.ஆர். ரமணன் அளித்துள்ள பேட்டியில், **“வானிலை ஆய்வைப் பொறுத்தவரையில் துல்லியம் என்ற பேச்சுக்கே இடமில்லை. வானிலை என்பது நொடிக்கு நொடி மாறக் கூடியது. சில தரவுகள், முன் அனுபவங்கள் மூலமாகக் கணிக்க முடியும். மழையைக் கணிக்கும் அளவுகோலின் உச்சபட்ச அளவே 20 செண்டி மீட்டர் தான். அதற்கு மேல் மழை என்றால் 20க்கும் மேல் என்று சொல்வதுதான் நடைமுறையில் இருக்கிறது. அதைத் தான் ரெட் அலர்ட் என்கிறோம். அது 30 செ.மீ., 40 செ.மீ. ராக இருக்கலாம். துல்லியமாகச் சொல்ல முடியாது. இவை எல்லாம் முன்னறிவிப்புகள், கணிப்புகள் மட்டும்தான்”** என்று சொல்லி இருக்கிறார். (ஜூனியர் விகடன் 27.12.2023)

**ஆனால் துல்லியமாகக் கணித்ததாகவும், துல்லியமாகச் சொன்னதாகவும் துல்லியமாக துணிச்சலாகப் பொய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் எதிர்க்கட்சியினர்.**




இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் 99–வது பிறந்த நாளையொட்டி நேற்று தியாகராயர் நகரிலுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. பங்கேற்று நல்லகண்ணு அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

## தூத்துக்குடிக்கு சிவகங்கையிலிருந்து ரூ. 1.50 கோடி மதிப்பிலான நிவாரணப் பொருட்கள்!

சிவகங்கை, டிச. 27-

தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய 4 மாவட்டங்கள் பெருமழையினால் பாதிப்புக்கு உள்ளானது. இதில் தூத்துக்குடி மாவட்டம் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டது. தமிழக முதல்வர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிப் பொருட்களை அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் விடுத்து இருந்தார்.

அதன்படி சிவகங்கை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஒரு கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பிலான நிவாரணப் பொருட்கள் லாரி மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. பல சரக்கு சாமான்கள், உணவுப் பொட்டலங்கள், அரிசி, வேட்டி, சேலைகள், மெழுகுவர்த்திகள், பால் பவுடர் உள்பட பல்வேறு உதவி பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

இதில் அலுவலர்கள் சார்பில் ரூ.98 லட்சத்து 81 ஆயிரத்து மதிப்பிலும் பள்ளி மாணவ, மாணவிகள் சார்பில் ரூ.41 லட்சத்து 80 ஆயிரத்து மதிப்பிலும் மொத்தம் ஒரு கோடியே 42 லட்சம் மதிப்பிலான பொருட்களை மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் லாரி மூலமாக அனுப்பி வைத்தார்.

### எளிமையின் அடையாளம்; தகைசால் தமிழர்

# தோழர் நல்லகண்ணு பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, டிச. 27 -**

**பொதுவுடமை இயக்கத்தின் மூத்தத் தலைவர் தோழர் நல்லகண்ணு அவர்களின் 99வது பிறந்த நாளை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், “எளிமையின் அடையாளமாகத் திகழும் தகைசால் தமிழர் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.**



தகைசால் தமிழர், தோழர் நல்லகண்ணு அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**99ஆவது பிறந்தநாள் கொண்டாடும் பொதுவுடைமை இயக்கத்தின் மூத்த தலைவர், எளிமையின் அடையாளமான தகைசால் தமிழர், தோழர் நல்லகண்ணு அவர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்!**

**ஆங்கிலேய அடக்குமுறை ஆட்சியை நம் மண்ணில் இருந்து அகற்றப் போராடிய ஐயா நல்லகண்ணு அவர்கள், நமக்கெல்லாம் ஊக்கமாகவும் உறுதுணையாகவும் இருந்து என்றும் வழிநடத்திட வேண்டும்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### நெல்லை மாவட்டத்தில் பெருமழை - வெள்ளத்தில்

# பாதிக்கப்பட்ட பாலங்கள், சாலைகள்: அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

## சீரமைப்புப் பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தல்!

நெல்லை, டிச. 27 -

திருநெல்வேலி மாவட்டத்தில் 17.12.2023 மற்றும் 18.12.2023 அன்று பெய்த கனமழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளபெருக்கு ஏற்பட்டு பல்வேறு பகுதிகளில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களில் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கனமழையினால் சேதமடைந்த கருப்பந்துறை ஆற்றுப் பாலம் சீரமைக்கும் பணிகளை பார்வையிட்டார்.

தொடர்ந்து சீவலப்பேரி பகுதியில் தாமிரபரணி ஆற்றின் பாலம் மற்றும் பாளையங்கோட்டையில் இருந்து சீவலப்பேரி செல்லும் சாலையில் இரு புறங்களிலும் அரிப்பு ஏற்பட்டுள்ளதையும், பார்வியைிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்கள்.

உடன் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர். மனோகரன் உடனிருந்தனர்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: -

மிகவும் கன மழை காரணமாக 5 தென்மாவட்டங்கள் இயற்கை சீற்றத்தின் காரணமாக பல்வேறு இடங்களில் வெள்ளம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 5 இடங்கள், விருதுநகர் மாவட்டத்தில் 13 இடங்கள், தென்காசி மாவட்டத்தில் 13 இடங்கள், தூத்துக்குடி மாவட்டத்தில் 113 இடங்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் 44 இடங்களில் சாலைகள் பழுதடைந்து போக்குவரத்து நிறுத்தம் செய்யும் அளவுக்கு மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது. இதில் சாலைகள் மற்றும் ஆற்று பாலங்கள் தண்ணீரில் மூழ்கி மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் போர்கால அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகிறது. நேற்று திருநெல்வேலி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு சீரமைப்பு பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மழை வெள்ளத்தின் காரணமாக மாவட்டத்தில் பல குளங்கள் உடைப்புகள் ஏற்பட்டுள்ளது. சீரமைப்பு பணிகளை மேற்கொண்டு விரைவாக சரி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குளங்கள் உடைப்புகளை நீர்வளத்துறையின் மூலம் சரிசெய்யப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 44 இடங்களில் நெடுஞ்சாலைத்துறை மூலம் சாலைகள் சரி செய்யப்பட்டு தற்போது போக்குவரத்து நடைபெற்று கொண்டிருக்கின்றது. அதில் ஒரு இடமான கருப்பந்துறை பாலம். இந்த தரை பாலம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இது பாளையங் கோட்டை பகுதியும் மேலப்பாளையம் பகுதியும் இணைக்கின்ற பாலமாகும். இப்போது தற்காலிகமாக 40 மீட்டர் நீளமும் 1.20 மீட்டு உயரத்திற்கு கான்கீரிட் சுவர் அமைக்கப்பட்டு போக்குவரத்து நடைபெற்று கொண்டிருக்கின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிற்கிணங்க தமிழ்நாட்டில் உள்ள தரைபாலங்கள் 1127 யும் உயர் மட்ட பாலங்களாக மாற்ற வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள். அந்த உத்தரவிற்கிணங்க தரைமட்ட பாலங்கள் படி படியாக உயர்மட்ட பாலங்களாக கட்டி வருகின்றோம். இந்த ஆண்டு கருப்பந்துறை பாலத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். இந்த பாலத்திற்கான டிசைனிங் வேலைகள் துறையின் மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் பின் ஒப்பந்தபுள்ளி விடப்பட்டு உயர் மட்ட பாலம் விரைவில் கட்டப்படும். உயர்மட்ட பாலம் கட்டப்பட்டால் மழை வெள்ளத்தால் இது போன்ற போக்குவரத்து பாதிப்புகள் இந்த பகுதி மக்களுக்கு வராது. அதை போல் குடிநீர் குழாய் கொண்டு செல்வதற்கும் ஒரு பாலம் கட்டப்பட உள்ளது. தற்போது குடிநீர் குழாய் இந்த தரை பாலத்தில் கொண்டு செல்ல தற்காலிகமாக நெடுஞ்சாலைத் துறை மூலம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் அந்த பாலத்திற்கும் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு கட்டப்படும் என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜீ அவர்கள், தலைமை பொறியாளர் சந்திரசேகர் (நெடுஞ்சாலைகள் மற்றும் கட்டுமானம்), கோட்டப் பொறியாளர் முத்துக்குமார், உதவி கோட்டப்பொறியாளர் சண்முகநாதன், உதவி பொறியாளர் ராஜேந்திரன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்.




தூத்துக்குடி மாவட்டத்தில் கடும் வெள்ள பாதிப்பு பகுதிகளை பார்வையிட்ட ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன், மழை வெள்ளம் பாதிப்பு – நிவாரண உதவி – பணி குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றார். இதில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, ஒன்றிய இணை அமைச்சர் முருகன், கழக நாடாளுமன்றக் கழகக் குழு துணைத் தலைவரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி, துறைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதி உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.



விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் வேளாண்மைத்துறை சார்பாக நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். ரகுராமன் முன்னிலையில், மழையால் சேதம் அடைந்த பயிர்களின் விவரம் குறித்து விவசாயிகளிடம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் கேட்டறிந்தார்.



தூத்துக்குடியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆறுதல்கூறி அவர்களுக்கு வேண்டிய நிவாரணப் பொருட்களை கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி வழங்கினார். உடன் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை - சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில்

# ரூ.184 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்குகிறார்!

சென்னை, டிச.27-

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ரூ.171 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை ஆகிய துறைகளின் சார்பில் மொத்தம் ரூ.184 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னை, கலைவாணர் அரங்கத்தில் இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (27.12.2023) சென்னை, கலைவாணர் அரங்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெறவுள்ள விழாவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ரூ.171 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை ஆகிய துறைகளின் சார்பில் மொத்தம் ரூ.184 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் பயனாளிகளுக்கு வழங்கவுள்ளார்.

பழங்குடியினருக்கான நலவாரியம், தமிழ்நாடு புதிரை வண்ணார் நலவாரியம், ஆதிதிராவிட பழங்குடியின எழுத்தாளர்களை ஊக்குவிக்க நிதியுதவி, அருந்ததியினருக்கு சிறப்பு உள்ஒதுக்கீடு, இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் போன்ற பல்வேறு திட்டங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நல்வாழ்விற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு, சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வியறிவு மற்றும் சமூக பொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை கட்டுதல், அம்மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு கல்வி உதவித்தொகைகள் மற்றும் கட்டணச் சலுகைகள் வழங்குதல், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், அம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்குதல், சுய தொழில் / வேலைவாய்ப்பினை உருவாக்கிட பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல் போன்ற பல்வேறு திட்டங்களையும் இவ்வரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

**முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ள பள்ளிக் கட்டடங்கள், விடுதிகள் மற்றும் சமுதாயநலக்கூடங்கள்**

கடலூர், செங்கல்பட்டு, திருவள்ளூர், விருதுநகர் மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 10 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் 9.22 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், அறிவியல் ஆய்வுக்கூடம், சுற்றுச்சுவர், கழிவறை மற்றும் குடிநீர் வசதி;

திருவள்ளூர், காஞ்சிபுரம், தருமபுரி, விருதுநகர், சிவகங்கை, கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் 19.84 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான 9 விடுதிகள்;

திருப்பூர், ஈரோடு, மதுரை, தென்காசி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 3.89 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 ஆதிதிராவிடர் சமுதாய நலக்கூடங்கள்;

என மொத்தம் ரூ.32.95 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாளை திறந்து வைக்கவுள்ளார்.

**முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்படவுள்ள புதிய விடுதிகள் மற்றும் கற்றல் கற்பித்தல் அறைகள்**

ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 8 விடுதிக் கட்டடங்கள்;

கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஆதிதிராவிடர் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 4 விடுதிக் கட்டடங்கள்;

மாநிலத்தின் 16 மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின கல்லூரி மாணவ, மாணவியர்கள் விடுதிகளில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கட்டப்படவுள்ள 22 கற்றல் கற்பித்தல் அறைகள்;

என மொத்தம் 138 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள விடுதிகள் மற்றும் கற்றல் கற்பித்தல் அறைகளுக்கு முதலமைச்சர் அவர்கள் நாளை அடிக்கல் நாட்டுகிறார்.

**அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் கடனுதவிகள்**

அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ், 244 பயனாளிகளுக்கு 79.35 கோடி ரூபாய் திட்ட மதிப்பிற்கான 53.94 கோடி ரூபாய் வங்கிக் கடனுடன் கூடிய 25 கோடி ரூபாய் மானியம் முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு கடனுதவிக்கான ஆணைகளை வழங்கவுள்ளார்.

**தமிழ்நாடு பழங்குடியினர் பட்டியலினத்தவர் புத்தொழில் நிதி வழங்கும் திட்டம்**

தமிழ்நாடு பழங்குடியினர் பட்டியலினத்தவர் புத்தொழில் நிதி வழங்கும் திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர்களால் நடத்தப்படும் 3 நிறுவனங்கள் மற்றும் பழங்குடியினரால் நடத்தப்படும் 2 நிறுவனங்கள், என மொத்தம் 5 புத்தொழில் நிறுவனங்களுக்கு 6.50 கோடி ரூபாய் பங்கு முதலீடு வழங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கவுள்ளார்.

**தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு வீடுகள் வழங்குதல்**

தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற தூய்மைப் பணியாளர் உறுப்பினர்களுக்கு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பங்குத் தொகையில் பயனாளியின் பங்குத்தொகையின் 90 சதவிகிதம் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் மானியமாக விடுவிக்கப்பட்டு 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 500 வீடுகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கவுள்ளார்.

**பழங்குடியினருக்கு வீடுகள் வழங்கும் திட்டம்**

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய வீடற்ற 443 பழங்குடியின இருளர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், காஞ்சிபுரம், உத்திரமேரூர், வாலாஜாபாத் மற்றும் ரீபெரும்புதூர் ஆகிய வட்டங்களில் 22.80 கோடி ரூபாய் செலவில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 443 வீடுகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கவுள்ளார்.

**முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டத்தில் வங்கிக் கடனுதவி**

முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டத்தின் (CMARISE) கீழ், 225 பயனாளிகள் பயன்பெறும் வகையில், 16.76 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிலான 10.65 கோடி ரூபாய் வங்கிக் கடனுடன் கூடிய 5.80 கோடி ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கவுள்ளார்.

**பழங்குடியினருக்கான வாழ்வாதார திட்டம்**

பழங்குடியினருக்கான வாழ்வாதார திட்டத்தின் கீழ், பழங்குடியினரின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக, பிரத்யேகமான வருவாய் ஈட்டும் திட்டங்களை அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தும் வகையில், வேளாண் பொறியியல் இயந்திரங்கள் வழங்குதல், சூரியமின் சக்தியுடன் இயங்கும் அரவை இயந்திரங்கள் வழங்குதல் மற்றும் அரியலூர் மாவட்ட இருளர் இன பழங்குடியின மக்களுக்கு முந்திரி சேகரம் செய்து கொள்ளும் உரிமைக்கான ஆணைகள், என மொத்தம் 1 கோடி ரூபாயில், 5 பழங்குடியின சங்கங்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சர் அவர்கள் ஆணைகளை வழங்கவுள்ளார்.

**புதிரை வண்ணார் பயனாளிகளுக்கு வங்கிக் கடனுதவி**

விளிம்பு நிலையில் உள்ள புதிரை வண்ணார் இன மக்களுக்கான, அடிப்படை சமூக பொருளாதார கணக்கெடுப்பு பணி தொடங்கப்பட்டு, அதன் மூலம் கண்டறியப்பட்ட 10 புதிரை வண்ணார் பயனாளிகளுக்கு 44.16 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பிற்கான, 27.98 இலட்சம் ரூபாய் வங்கிக் கடனுதவியுடன் கூடிய 15.45 இலட்சம் ரூபாய் மானியம் முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கவுள்ளார்.

**கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள் வழங்குதல்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழ், மாநில அரசு வகுக்கும் எதிர்பாரா திட்டத்தின்படி (Model Contigency Plan) தீவிர வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களின் 50 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர், சமையலர் ஆகிய பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கவுள்ளார்.

அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு உட்பயிற்சி உதவித்தொகை வழங்குதல் அரசு சட்டக் கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயின்று வரும் 1000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு உட்பயிற்சி (Internship) காலங்களுக்கான உதவித்தொகை 1 கோடி ரூபாய் முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு வழங்கவுள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயில கல்வி உதவித் தொகை வழங்குதல் வெளிநாடுகளில் கல்வி பயில்வோருக்கான கல்வி உதவித்தொகைத் வழங்கும் திட்டத்தின் கீழ், ஆண்டுக்கு 8 இலட்சம் ரூபாய்க்கு குறைவாக வருமானம் உள்ள குடும்பங்களின் மாணவர்களுக்கு 36 இலட்சம் ரூபாய்க்கு மிகாமலும், ஆண்டுக்கு 8 இலட்சம் ரூபாய்க்கு மேல் 12 இலட்சம் ரூபாய்க்கு குறைவாக வருமான உள்ள குடும்பங்களின் மாணவர்களுக்கு 24 இலட்சம் ரூபாய்க்கு மிகாமலும் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், வெளிநாட்டில் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயில்வதற்காக இந்த ஆண்டு 30 மாணவ, மாணவியர்களுக்கு அனுமதி ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கவுள்ளார்.

# ஊராட்சித் துறை சார்பில் புதிய கட்டிடங்கள்!

## முதல்வர் திறந்து வைத்தார்... முதல் பக்கத் தொடர்ச்சி

சுமார் 600 கிராமச் செயலகக் கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக மாநிலத்தின் 21 மாவட்டங்களில் 20.54 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 50 கிராமச் செயலகங்களை முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

கிராமச்செயலகக் கட்டடங்களில் கிராம ஊராட்சித் தலைவருக்கான அறை, கிராம ஊராட்சி செயலருக்கான அறை, கிராம நிர்வாக அலுவலருக்கான அறை மற்றும் கூட்ட அறை, இணையதள வசதி, பொது மக்கள் அமர்வதற்கான வசதி, குடிநீர் மற்றும் கழிவறை வசதி ஆகியவற்றுடன் அனைத்து துறை அலுவலர்களும் பயன்படுத்திடும் வகையில் கூட்ட அறையில் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம், கிராம ஊராட்சியிலுள்ள பொது மக்கள் கிராம செயலகங்களை எளிதில் அணுகி தங்களது குறைகளைப் போக்கிட வழிவகை ஏற்படும்.

**5 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள்**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் மற்றும் தேசிய கிராம சுயாட்சி திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் 24 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கட்டப்பட்டுள்ள 102 கிராம ஊராட்சி மன்றக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு பழுதடைந்த நிலையில் இருந்த ஊராட்சி ஒன்றியக் கட்டடங்களுக்குப் பதிலாக, நாமக்கல் மாவட்டம் பரமத்தி, தேனி மாவட்டம் போடிநாயக்கனூர், கிருஷ்ணகிரி மாவட்டம் - கெலமங்கலம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் - மணச்சநல்லூர், மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் - பொள்ளாச்சி தெற்கு ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்க் கூறு நிதியிலிருந்து 15.46 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி, பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், பள்ளிக் கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா. பொன்னையா, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முரசொலி விநியோகப்பிரிவில் பணிபுரிந்து வந்த திருவண்ணாமலை என்.கண்ணன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.27-

‘முரசொலி’ விநியோகப்பிரிவில் பணிபுரிந்த என்.கண்ணன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், “முரசொலியில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் சுமார் 12 ஆண்டு காலமாக விநியோகப்பிரிவில் பணிபுரிந்து வந்த என்.கண்ணன் அவர்கள் உடல்நலக்குறைவால் நேற்று முன்தினம் (25.12.2023) மறைவுற்றார் என்ற செய்தி அறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

முரசொலி விநியோகப் பிரிவில் திறம்பட பணியாற்றியவர். இன்முகத்துடன் அலுவலகத்தில் அனைவருடன் பழகி, மிகுந்த சுறுசுறுப்புடன் செயலாற்றி வந்தவர்.

உடல் நலிவுற்று கடந்த ஒரு சில மாதங்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என அறிந்து மிகுந்த துயருற்றேன்.

அவரது பிரிவால் வாடும் முரசொலி அலுவலர்கள், ஊழியர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்”.

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முரசொலி விநியோகப் பிரிவில் பணிபுரிந்த

# திருவண்ணாமலை என்.கண்ணன் மறைவு!

## கழகத்தினர் - நண்பர்கள் அஞ்சலி!

*சென்னை, டிச. 27-*

*முரசொலி நாளிதழில் விநியோகப் பிரிவில் கடந்த 2011 முதல் பணியாற்றி வந்த திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் ஒன்றிய மாணவர் அணி முன்னாள் அமைப்பாளரும், கலசப்பாக்கம், மேட்டுப்பாளையம் நியாதிபதி சாமுண்டீஸ்வரி ஆகியோரின் மூத்த புதல்வருமான என்.கண்ணன் நேற்று முன்தினம் (25.12.2023 திங்கட்கிழமை) இரவு 8 மணி அளவில் உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார்*



*என்பதை அறிவிக்க வருந்துகிறோம். தகவலறிந்து அன்னாரது உடலுக்கு கழகத்தினர், நண்பர்கள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.*

*அன்னாருக்கு க.சீத்தல் என்ற ஒரு மகளும், என். சுதாகர், என்.ராஜா என இரு சகோதரர்களும், என். பத்மா என்ற தங்கையும் உள்ளனர்.*

*அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று மாலை 3 மணியளவில் அவரது சொந்த ஊரான எண். 153, பெரிய தெரு, மேட்டுப்பாளையம், கலசபாக்கம் வட்டம், திருவண்ணாமலை எனும் முகவரியில் இருந்து புறப்பட்டு மேட்டுப்பாளையத்தில் உள்ள இடுகாட்டில் அன்னாரது உடல் எரியூட்டப்பட்டது.*

# டெல்லியில் கடும் பனி மூட்டம்!

*புதுடெல்லி, டிச.27-*

*டெல்லியில் கடும் பனி மூட்டம் காரணமாக 30 விமானங்கள் தாமதமாக இயக்கப்படுகின்றன. தலைநகர் டெல்லி, உத்தரபிரதேசம், பஞ்சாப் உள்ளிட்ட வட மாநிலங்களில் வழக்கத்திற்கு மாறாக கடும் பனி மூட்டம் நிலவுகிறது. இதனால் அங்கு ரயில் மற்றும் சாலைப் போக்குவரத்துகளின் சேவை, விமான சேவைகள் தடைப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், டெல்லியில் காற்றின் தரம் மிகவும் மோசமாக நிலையில் உள்ளது என காற்றின் தரம் குறித்த ஆராய்ச்சி அமைப்பு தெரிவிக்கிறது. அடர்ந்த மூடு பனி காரணமாக வடமாநிலங்களில் ஆரஞ்சு, மஞ்சள் எச்சரிக்கை விடுக்க ப்பட்டுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*



சிவகங்கை மாவட்ட மகளிரணி சார்பில் தூத்துக்குடியில் பெருமழையினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரண உதவிப் பொருட்களை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் திருப்பத்தூர் ஒன்றியக்குழு தலைவர் எஸ்.சண்முகவடிவேலு, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானிகணேசன் உட்பட மகளிரணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நேற்று முன்தினம்ள(25.12.2023), இளைஞர் நலன்விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்.உதயநிதி ஸ்டாலின் அவர்களும், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்.எ.வ.வேலு, ஆகியோர் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள். இந்த நிகழ்வின் போது, அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, சட்டப்பேரவைத் தலைவர் எம்.அப்பாவு மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் .கே.பி.கார்த்திகேயன் மற்றும் மாவட்ட அதிகாரிகள், அலுவலர்கள் உடனிருந்தனர்.



தூத்துக்குடி மாவட்டத்தில் முதற்கட்டமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, தொடர் கன மழை மற்றும் வெள்ளப்பெருக்கால் உயிரிழந்த 22 பேரின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, தலா ரூ. 5 லட்சத்திற்கான நிவாரணத் தொகையை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி, அதேபோல, வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்கள் 16 பேருக்கு தலா ரூ. 10 ஆயிரத்திற்கான நிவாரணத் தொகை வழங்கினார். இந்நிகழ்வின்போது, கழக நாடாளுமன்றக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி, அமைச்சர்கள் கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், பி.மூர்த்தி, ஆர்.காந்தி உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உள்ளனர்.

### முன்னாள் ஒடிசா மாநில ஆளுநர் – மறைந்த

# எம்.எம்.ராஜேந்திரனுக்கு காவல் துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, டிச. 27 -

முன்னாள் ஒடிசா மாநில ஆளுநர் எம்.எம்.ராஜேந்திரன் அவர்களுக்கு காவல் துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் உத்தரவு வருமாறு:-

ஒடிசா மாநிலத்தின் முன்னாள் ஆளுநரும், பெருந்தலைவர் காமராஜர், தமிழினத் தலைவர் கலைஞர் உள்ளிட்ட முதலமைச்சர்களுடன் பணியாற்றிய வரும், தமிழ்நாட்டின் முன்னாள் தலைமைச் செயலாளருமான எம்.எம். ராஜேந்திரன் அவர்கள் மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

1957ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் தனது பணியைத் தொடங்கி, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் ஆட்சித் தலைவராகவும், ஒன்றிய அரசின் செயலாளராகவும், தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளராகவும் பணியாற்றி இந்திய ஆட்சிப் பணியில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்து, ஓய்வுக்குப் பிறகும் ஒடிசா மாநில ஆளுநராக செவ்வனே மக்கள் பணியாற்றியவர் திரு. எம்.எம். ராஜேந்திரன் அவர்கள்.

உடல்நலக் குறைவால் சிகிச்சை பெற்று வந்த அண்ணாரின் மறைவு ஒரு பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், உள்ளிட்ட அனை வருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.எம். ராஜேந்திரன் அவர்களின் உடலுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

மா. சுப்பிரமணியன் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. அவரது சேவைகளைப் போற்றும் வகையில், காவல்துறை மரியாதையுடன் இறுதி நிகழ்வு நடைபெறும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

### தூத்துக்குடியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த

# ஆ.முருகன் குடும்பத்திற்கு ஆறுதல் - ரூ.5 இலட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச.27-

தூத்துக்குடி மாவட்டம் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

தூத்துக்குடி மாவட்டம் மற்றும் வட்டம், தூத்துக்குடி பகுதி1 கிராமம், அம்பேத்கார் நகர் மூன்றாவது தெருவைச் சேர்ந்த ஆ.முருகன் (வயது 45), த/பெ. ஆத்திக்கண்ணு என்பவர் (24.12.2023) அன்று கனமழையினால் சேதமடைந்த கிருஷ்ணராஜபுரம், ஐந்தாவது தெருவில் உள்ள மின்கம்பத்தினை பழுதுபார்த்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# நிவாரணம் வழங்குவதற்கான டோக்கன் வழங்கும் பணி!

## தென்மாவட்டங்களில் தொடங்கியது!

நெல்லை, டிச. 27-

நெல்லை மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தமிழ்நாடு அரசின் 6 ஆயிரம் ரூபாய் நிவாரண தொகை வழங்குவதற்கான டோக்கன் வழங்கும் பணி துவங்கி உள்ளது.

வரலாறு காணாத வகையில் கொட்டித்தீர்த்த அதி கனமழையால், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. தமிழ்நாடு அரசின் துரித நடவடிக்கையால், அந்த மாவட்டங்களில் சில நாட்களிலேயே இயல்பு நிலை திரும்பியது.

இதனிடையே மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆய்வு செய்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மிகக் கடுமையான வெள்ள பாதிப்பு ஏற்பட்ட வட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில், வெள்ள நிவாரணமாக 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும், கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்ட குடும்ப அட்டை தாரர்களுக்கும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தார். இந்த நிலையில், நெல்லை மாவட்டத்தில், நிவாரணத் தொகை வழங்குவதற்கான டோக்கன் வழங்கும் பணி துவங்கி உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, சேரன்மகாதேவி ஆகிய மூன்று வட்டங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டதாகவும், அம்பாசமுத்திரத்தில் 12 வருவாய் கிராமங்களும் நாங்குநேரியில் 30 வருவாய் கிராமங்களும், ராதாபுரத்தில் 10 வருவாய் கிராமங்களும் பாதிக்கப்பட்டதாக கணக்கீடு செய்து, நிவாரணத்தொகை வழங்குவதற்கான டோக்கன் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 5 கிலோ அரிசியுடன் ஒரு கிலோ பருப்பும் வழங்க அரசு உத்தரவிட்ட நிலையில், அதற்கான டோக்கனும் வழங்கப்பட்டு வருகிறது. இன்று தொடங்கிய இந்த பணி மூன்று நாட்களுக்கு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ. 400 கோடியில் அமைக்கப்பட்ட

# “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்” திறப்புக்கான முன்னேற்பாடுப் பணிகள்!

## அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், பி.கே. சேகர்பாபு நேரில் ஆய்வு!

செங்கல்பட்டு,டிச.27-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி. கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (25.12.2023) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்” திறப்பு விழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை ஆய்வு செய்தனர்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் சுமார் 400 கோடியில் அமைந்திருக்கின்ற “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையமானது” அனைத்து பணிகளும் நடைபெற்று. வெகுவிரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. இந்த பேருந்து நிலையம் வெகு விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு அமைய வேண்டும் என்பதற்காக தொடர் முயற்சியாக நம்முடைய மாவட்ட அமைச்சர் தா.மோ.அன்பரசன் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்துக்கு அளவிட முடியாத ஒத்துழைப்பை நல்கி இருப்பதற்கு இந்த நேரத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வரலட்சுமி மதுசூதனன் அவர்களும் ஆய்வுக்கு வரும்போதெல்லாம் உடனிருந்து எங்களுக்கு ஊக்கத்தை அளித்து இருக்கிறார்கள். துறையினுடைய செயலாளர் சமயமூர்த்தியும், உறுப்பினர் செயலாளர் அன்ஷுல் மிஸ்ராவும், இந்த மாவட்டத்தினு டைய ஆட்சியாளர் ராகுல் நாத்தும் தொடர்ந்து இந்த பேருந்து முனையம் நிறைவாக மக்கள் அர்ப்பணிப்புக்குகொண்டு செல்வதற்கு எல்லா வகையிலையும் உதவியாக இருந்ததை இந்த நேரத்தில் நன்றியோடு நினைவு கூறுகிறேன்.

இந்த பேருந்து நிலையமானது 86 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கிறது. இதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்துகின்ற முயற்சி முழுமை பெற்றிருக்கிறது. 2 3 மாதங்களுக்கு முன்பே இந்த பேருந்து நிலையம் திறக்கின்ற சூழல் இருந்தும் தள்ளிப்போனதற்கான காரணம் மழை காலங்களில் பெருமளவு தண்ணீர் தேங்கி இருப்பதை கண்டறிந்து. 1700 மீட்டர் அளவுக்கு மழைநீர் வடிகால் அமைப்பு பணி நடந்தது. அந்த பணி தற்போது நிறைவு பெற்றிருக்கிறது. கடந்த ஒன்றரை மாதங்களாக விட்டு விட்டு பெய்த மழையினால் தொடர்ந்து அந்த பணிகளை விரைவாக முடிக்க முடியாத ஒரு சூழல் இருந்தாலும் இரவு பகல் பாராமல் அந்த 1200 மீட்டருக்கு மூன்று பிரிவாக பிரித்து பணிகளை மேற்கொண்டதன் விளைவாக சுமார் இரண்டரை மாத காலங்களிலேயே அந்த பணியும் நிறைவுக்கு வந்தது.

இந்த பேருந்து நிலையம் முழுமையாக பயன்பாட்டிற்கு வருகின்றபோது 2,310 பேருந்துகள் தினந்தோறும் இங்கிருந்து இயக்கத்தில் இருக்கும். அதில் 40 பேருந்துகள் ஆம்னி பேருந்துகள் உள்ளடக்கும். கிட்டத்தட்ட 1,00,000 மக்கள் தினந்தோறும் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் மக்களுடைய பயன்பாடு இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அப்படி வருகின்ற மக்களுக்கு தேவையான உணவு வசதி, இப்போது திடீரென்று உடல் நலக்குறைவு ஏற்பட்டால் அவர்களுக்குண்டான மருத்துவ சிகிச்சை தேவைப்படுகின்ற மருந்து, மாத்திரைகள் வாங்குவதற்கு பார்மசி. வருகின்ற ஓட்டுனர் மற்றும் நடத்துனர் ஓய்வெடுப்பதற்கு ஓய்வறைகள், அதே போல் உணவகங்கள், தீ தடுப்புக்காக முழுமையாக தயார் செய்யப்பட்டு, தயார் நிலையில் தீயணைப்புத் துறை வாகனங்கள். அதே போல் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின்சார வசதி, தேவையான பெட்ரோல், டீசல் போடுவதற்கு உண்டான டீசல் பங்க் அமைப்பது, புறக்காவல் நிலையம் செயல்படுவதற்கான பணிகளும் நடைபெற இருக்கின்றன. ஆகவே எல்லா வகைகளையும் மக்களுடைய பயன்பாட்டிற்கு உகந்த பேருந்து நிலையமாக அனைத்து கட்டமைப்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

வருகின்ற தமிழ் புத்தாண்டில் மக்கள் மகிழ்ச்சியோடு இந்த பேருந்து நிலையத்திலிருந்து பயணிக்கும் வகையில் திறப்புவிழா அமையும், அதாவது தமிழ் புத்தாண்டில் இந்த பேருந்து நிலையத்தை மக்கள் மகிழ்ச்சியோடு பயன்படுத்துவார்கள். இந்த பேருந்து நிலையமானது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டு, அர்ப்பணிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

# அன்னவாசல் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் - சேலம் சுஜாதா சிறப்புரை!

புதுக்கோட்டை, டிச.27-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் வடக்கு ஒன்றியம் தமிழினத் தலைலர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்தறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா, சேலம் இளைஞரணி மாநாடு அழைப்பு விடுத்து மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (27.12.2023 புதன் கிழமை) மலைக்குடிப்பட்டியில் அன்னவாசல் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர். ஆர்.மாரிமுத்து தலைமையிலும், பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன் வரவேற்புரையிலும் நடைபெறுகிறது. புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, காலநிலை மாற்றம் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன்ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். மாநில பிரச்சாரக் குழுச் செயலாளர் சேலம் சுஜாதா, சொற்பொழிவாளர் சொ.தமிழினியன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

கே.ஆர்.என்.போஸ், எம்.செந்தில்குமார், டி.ஆர். ஆர்.ரெங்கராஜ், கீரை.தமிழ்ராஜா, வை.விஜயகுமார், பூங்குடி எம்.சிவக்குமார், கா. இளவரசன், பொன்.பாரி வள்ளல், கே.எஸ்.ச.இளைய சூரியன், பி.மாரிமுத்து, பி. வி.எஸ்.பாண்டியராஜா, கார்த்திக், பாக்கியராஜ், வனிதா போஸ், ஆர்.விஜயக்குமார், என்.எஸ்.பன்னீர் செல்வம், சிஆர்.கே.மதியழகன், ஜி.மாதவி, எம்.கல்யாணி, இராஜேஸ்வரி.செந்தில்குமார், கை.பழனிச்சாமி பொன்.தீத்தப்பன், பி.இராசப்பன், ஏ.கண்ணதாசன், டி.கணேசன், எம்.பி.எல். சின்னத்தம்பி, பி.எம்.சி. ஜெயராமன், கே.ஆர் பி. ஜெயச்சந்திரன், மருதாந்தலை செல்வகுமார், இராஜேந்திரன், ராமச்சந்திரன், சுப்பிரமணியன், ரவி சண்முகம், கே.ஆர்.ஜி.வேலுச்சாமி, எம்.வேலு, வி.சி. பரஞ்சோதி, டி.சுப்பிரமணியன், ரவி, டி.சண்முகம், ஆர்.குமாரசாமி, சி.ராமச்சந்திரன் கே.சண்முகம், உ. என்.சுப்பையா, ஆர்.ஆர். எஸ்.எம்.சுரேந்தர், ஜி.அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.எம். அப்துல்லா எம்.பி, பெரியண்ணன் அரசு, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. கவிச்சுடர் கவிதைபித்தன் , பி.டி.அரசக்குமார், த.சந்திரசேகரன், புதுக்கோட்டை விஜயா. அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், வி.என்.மணி, செ.அசோக் பாண்டியன், ஆ.செந்தில், அரு.வீரமணி, கே.எஸ்.சந்திரன், சுப.சரவணன், எஸ். எஸ்.கருப்பையா, பெ. ராஜேஸ்வரி, க.மதியழகன், எம்.லியாகத் அலி, சு.சண்முகம், எம்.எம்.பாலு, டாக்டர் செ. குறிஞ்சிவாணன், என்.சாத்தையா, சி.ஆர். வி.சித்ரா, முல்லை முபாரக், ஆர்.செல்லத்துரை, இராசு. சந்தோஷ், எஸ்.வி.ஆர். ஸ்டாலின்ராஜா, கலைஞர் கருணாநிதி, அன்சாரி, இளஞ்சேரன் முத்துச்சாமி, ஸ்டாலின் நாராயணசாமி, இ.செந்தில்ராஜா, சுந்தர்ராஜன், எம்.கோவிந்தராஜன், செல்லம் அசோக்குமார், வள்ளிக்க ண்ணு பழனிச்சாமி, மீனா பாண்டியன், பாட்ஷா, ஏ.பி.ஆர். ராஜாங்கம், கே.ஜி.எஸ்.சுகுமாரன், சிவசுப்பிரமணியன், சுரேஷ் குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக் கின்றனர்.

ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர்

எம்.பி..தங்கவேல் நன்றி கூறுகிறார்.



நெல்லையில் கனமழை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு வண்ணார்பேட்டையில் வைத்து தொ.மு.ச. சார்பில் நிவாரணப் பொருட்களை மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் தர்மன்,பொருளாளர் வண்ணை சேகர், மாமன்ற உறுப்பினர் கந்தன், கழக நிர்வாகிகள் வழக்கறிஞர் தினேஷ், அரசன் ராஜ், அண்ணன்ராஜ், சங்கர்,சாய் பாபா, குறிச்சி ஆனந்த், கால்வாய் துரைபாண்டியன், சதீஷ்,ஸ்மார்ட் சுரேஷ், வாசுகி செல்லதுரை உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

### சுனாமியால் உயிரிழந்தோரை நினைவில் ஏந்தி

# காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலை தளத்தில் பதிவு!

சென்னை, டிச. 27 -

ஆழிப்பேரலையின் 19 ஆம் ஆண்டையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப் பக்கத்தில் கால நிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்வோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆழிப்பேரலையின் 19 ஆம் ஆண்டையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

பல்லாயிரம் பேரின் வாழ்வைப் புரட்டிப் போட்டு, தமிழ்நாட்டை மீளாத்துயரில் ஆழ்த்திய ஆழிப்பேரலையின் 19ஆம் ஆண்டு!

சுனாமியால் உயிரிழந்தோரை நினைவில் ஏந்தி, காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்ளும் ஆக்க பூர்வமான திட்டங்களுடன் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ளும் கட்டமைப்புகளை உருவாக்குவோம்! அதன் முதல் படியாக இயற்கையைக் காக்க உறுதி யேற்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம், கலந்தரா ஊராட்சி மன்ற அலுவலகத்தை மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு திறந்து வைத்து, அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் கிழக்கு ஒன்றியச் செயலாளர் கவிதாதண்டபாணி, ஊராட்சிமன்றத் தலைவர் எஸ்.அம்பேத்கர், கிளைக்கழகச் செயலாளர் ஜெகநாதன் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "மக்களுடன் முதல்வர்" என்ற வரலாற்று சிறப்பு மிக்க திட்டத்தை கோவையில் துவக்கி வைத்ததன் தொடர்ச்சியாக திட்டக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெண்ணாடம் பேரூராட்சியில் நடைபெற்றது. முகாமை அமைச்சர் சி.வி.கணேசன் பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனடி தீர்வு காண அறிவுறுத்தினார்.

### கனமழை: அரசியல் வேண்டாம்!

# தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கிடுவதில் ஓரவஞ்சனை!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை, டிச. 27 -

தென் மாவட்ட கனமழையில் அரசியல் வேண்டாம் என்று நேற்றைய (26.12.2023) தினகரன் தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.



தினகரன்

டிசம்பர் 26, 2023 செவ்வாய்க்கிழமை

அரசியல் வேண்டாம்

வங்கக்கடலில் ஏற்பட்ட வளிமண்டல சுழற்சி காரணமாக பெய்த பெருமழை நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்தை புரட்டிப்போட்டது. மழை வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து இன்னும் மக்கள் மீளவில்லை. நெல்லை-திருச்செந்தூர், நெல்லை-தூத்துக்குடி, திருச்செந்தூர்-தூத்துக்குடி பிரதான சாலைகள் மழை வெள்ளத்தால் துண்டிக்கப்பட்டுள்ளது. 4 நாட்களாக பொது போக்குவரத்து துண்டிக்கப்பட்ட நிலையில் கடந்த 3 நாட்களாக மாற்றுப்பாதைகளிலும், தற்காலிக பாதைகள் வழியாகவும் பஸ்கள் இயக்கப்படுகிறது.

கிராம சாலைகள், நகர்ப்புற சாலைகள், ஆற்றுப்பாலங்கள் உள்ளிட்டவைகளும் கடுமையான சேதத்துக்கு உள்ளாகி இருக்கிறது. அவற்றை

இது குறித்து 'தினகரன்' தலையங்கம் வருமாறு:

வங்கக்கடலில் ஏற்பட்ட வளிமண்டல சுழற்சி காரணமாக பெய்த பெருமழை நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்தை புரட்டிப்போட்டது. மழை வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து இன்னும் மக்கள் மீளவில்லை. நெல்லைதிருச்செந்தூர், நெல்லை தூத்துக்குடி, திருச்செந்தூர் தூத்துக்குடி பிரதான சாலைகள் மழை வெள்ளத்தால் துண்டிக்கப்பட்டுள்ளது. 4 நாட்களாக பொது போக்குவரத்து துண்டிக்கப்பட்ட நிலையில் கடந்த 3 நாட்களாக மாற்றுப்பாதைகளிலும், தற்காலிக பாதைகள் வழியாகவும் பஸ்கள் இயக்கப்படுகிறது.

கிராம சாலைகள், நகர்ப்புற சாலைகள், ஆற்றுப்பாலங்கள் உள்ளிட்டவைகளும் கடுமையான சேதத்துக்கு உள்ளாகி இருக்கிறது. அவற்றை கணக்கெடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அறிக்கையாக சமர்ப்பிக்கும் பணிகள் நடந்து வருகிறது. ஏரல் மற்றும் வைகுண்டம் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள 250க்கும் மேற்பட்ட கிராமங்களில் 5 நாட்களுக்கு பிறகு மின்சாரம் வழங்கப்பட்டது. மின்கம்பங்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டதால் மின் விநியோகம் வழங்குவதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 2 மாவட்டத்திலும் பயிரிடப்பட்ட நெல், வாழைகள் முற்றிலும் நாசமாகி உள்ளது. 38 பேர் வரை உயிரிழந்த சம்பவங்களும் நடந்துள்ளன.

இயல்பு வாழ்க்கையை புரட்டி போட்ட இந்த வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களை ஒன்றிய குழு நேரில் ஆய்வு செய்து முடித்துவிட்டது. முதல்வர் மு.க.ஸ்டாலின், டெல்லி சென்று பிரதமர் மோடியை சந்தித்து மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் பெருமழை வெள்ள பாதிப்புகளை எடுத்து கூறி மக்களின் வாழ்வாதாரம் அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது. உடனடியாக தேசிய பேரிடர் நிதியில் இருந்து நிதியுதவி வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். சென்னை திரும்பியதும் நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்தை ஆய்வு செய்த முதல்வர், மீட்பு பணிகளை முடுக்கி விட்டார்.

10க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் முகாமிட்டு மீட்பு பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர். துரித நடவடிக்கையால் மெல்ல மெல்ல மீண்டு வருகிறது. வெள்ளத்தால் வீணான அரிசி மூட்டைகளை சாலையில் வீசி சென்றுவிட்ட வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மீண்டெடுப்பதற்கு வங்கிகள் குறைந்த வட்டியில் கடனுதவி வழங்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் மேற்கொள்ள பேரிடர் நிதியுதவி வழங்க தமிழக அரசு மற்றும் எதிர்க்கட்சிகள் ஒன்றிய அரசுக்கு கோரிக்கை விடுத்ததன் விளைவாக மனம் இறங்கிய பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலினிடம் பேசியுள்ளார். வெள்ள பாதிப்பை மதிப்பிட ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை நியமித்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

ஒரே நாடு, ஒரே... என பேசும் ஒன்றிய அரசு, சமீபத்தில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களை மாநிலங்கள் மேற்கொள்ள ஒன்றிய நிதியமைச்சகம், நிதி ஒதுக்கீடு செய்ததில் தமிழ்நாட்டுக்கு ஓரவஞ்சனை செய்துள்ளது. இதுபோன்று பேரிடர் நிதி ஒதுக்குவதிலும் தமிழ்நாட்டை ஒன்றிய அரசு வஞ்சிக்க வேண்டாம். இந்தியாவில் இந்தாண்டில் புயல், வெள்ளத்துக்கு அதிக பாதிப்புக்கு உள்ளான மாநிலம் தமிழ்நாடு ஆகும். எண்ணில்லா துயரத்தை சென்னை மற்றும் தென்மாநில மக்கள் சந்தித்து உள்ளனர். இந்திய பிரஜைக்கு பாதிப்பு என்ற கண்ணோட்டத்தில் ஒன்றிய அரசு பார்க்க வேண்டும். உடனடியாக பேரிடர் நிவாரண நிதியை வழங்க வேண்டும். உயிர் மற்றும் வாழ்வாதார பிரச்னையில் அரசியல் செய்யாமல் அனைவரும் ஒன்றிணைந்து, பாதிப்பு தடம் தெரியாமல் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டிய நேரமிது.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சிவகங்கையில் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை சார்பில்

# பாதுகாப்பான புலம் பெயர்தல் குறித்த விழிப்புணர்வு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்!

*சிவகங்கை, டிச. 27 -*

சிவகங்கையில் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை, தமிழ்நாடு வீட்டு வேலை தொழிலாளர் நல அறக்கட்டளை, சிவகங்கை பல்நோக்கு சேவை சங்கம் சார்பில் பாதுகாப்பான புலம்பெயர்தல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. ஆரோக்கியராஜ் வரவேற்றார்.

கலெக்டர் ஆஷாஅஜித், சிவகங்கை மறைமாவட்ட ஆயர் லூர்து ஆனந்தம், எஸ்பி அர்விந்த் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமை வகித்து பேசியதாவது:

சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த ஏராளமானோர் வெளிநாடுகளில் பணிகளுக்கு செல்கின்றனர். இப்போது மட்டுமல்ல நம் முன்னோர் காலத்திலும் ஏராளமானோர் வியாபாரம், பணிகளுக்கு வெளி நாடுகளுக்கு சென்றுள்ளனர். தற்போது படித்தவர்கள், படிக்காதவர்கள் என வெளிநாடுகளுக்கு செல்பவர்களில் 50சதவீதத்திற்கும் மேற்பட்டோர் நல்ல நிலையில் உள்ளனர். குறிப்பிட்ட சதவீதத்தினர் பிரச்சினையில் சிக்குகின்றனர். குறைவான ஊதியம், வேறு வேலைகள், சுற்று விசா என வெளிநாடு சென்ற பின்பு ஏற்படும் பிரச்சினைகள், வெளிநாட்டிற்கு அழைத்து செல்வதாக பணத்தை பெற்றுக்கொண்டு ஏமாற்றும் பிரச்சினை என பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகிறது.

இவ்வாறு பிரச்சினை ஏற்படாமல் இருப்பதற்கும், பிரச்சினையில் சிக்குபவர்களை மீட்பதற்கும், இது போன்ற அவல நிலையை போக்குவதற்கும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை என்ற தனித்துறையை நமது முதல்வர் உருவாக்கியுள்ளார். இத்துறை மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது வெளிநாடு செல்பவர்கள் பல்வேறு விபரங்கள் பெறுவதற்கும், தேவையான பயிற்சி பெறுவதற்கும் சிவகங்கை, ராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், பெரம்பலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் முன் பயண புத்தாக்கப் பயிற்சி மையம் அமைத்து முதல்வர் உத்தரவிட்டுள்ளார். வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மட்டுமின்றி தமிழ்நாட்டில் வசிக்கும் நம் தொப்புள்கொடி உறவுகளான இலங்கை தமிழர்கள் நலனிலும் அதிக அக்கறை கொண்ட முதல்வர், முகாம் வாழ் தமிழர்களுக்கு வீடுகள் கட்டித்தர உத்தரவிட்டு பல்வேறு முகாம்களில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. பல முகாம்களில் வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு பேசினார். இந்நிகழ்ச்சியில் நிர்வாகிகள் அமலவளர்மதி, பிரிட்டோ ஜெயபாலன், அமலன் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



நெல்லையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பேட்டை பகுதி 23 வது வார்டில் உள்ள மக்களுக்கு நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் நிவாரணப் பொருட்களை வழங்கினார். நிகழ்வில் நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையா பாண்டியன்,கவுன்சிலர் பிரபாசங்கரி,பாளை பகுதி செயலாளர் அண்டன் செல்லதுரை,நிர்வாகிகள் ஸ்டார் முருகன்,சுப்ரித் சுப்பிரமணியன், ஷெட்டி,விஸ்வநாதன்,சங்கரன், சரவணன்,ஜெயபிரகாஷ், செய்யது அலி,உசைனி, சுந்தர்ராஜ்,சரவணன்,ராமு, மந்திரம்,லட்சுமணன்,தாரிக் ராஜா,மணி,நியாஸ், அய்யம்பெருமாள்,அப்பு,சதீஷ், கண்ணா உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

## சென்னை உள்ளிட்ட 9 மாவட்டங்களில் மழை!

சென்னை, டிச. 27 -

கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, புதுவை மற்றும் காரைக்கால் பகுதியில் லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வனிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் அதில் விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சிவகங்கை உள்ளிட்ட மாவட்டங்கள் மற்றும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதியில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்ட

### "உடன்பிறப்புகளாய் இணைவோம்"என்ற மாபெரும் முன்னெடுப்புடன்

### "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவள விழா ஆண்டு"

### புதிய உறுப்பினர் சேர்த்தல் பணிகள் முடிந்து

# புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கல்!

## (இரண்டாம் கட்டம்!)

## தலைமைக் கழக அறிவிப்பு

இந்திய வரலாற்றில் ஜனநாயக முறைப்படி உறுப்பினர் சேர்த்தலும் புதுப்பித்தலுமான பணிகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வார்டு கிளைகள், ஊராட்சி, பேரூர், ஒன்றிய, நகர, பகுதி, நகரிய, மாவட்ட, மாநகர் மாவட்ட, மாநில அமைப்புகள், தலைமைக் கழகம் ஆகியவற்றுக்கு தேர்தல் நடத்தி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து அமைப்புக்களை செயற்படுத்தும் கட்சி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நாடறியும். ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 140 வார்டு கழகங்களையும், 1 கோடியே 10 இலட்சத்திற்கு மேல் உறுப்பினர்களையும் கொண்ட தி.மு.கழகம்.

"தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் அரை நூற்றாண்டு காலம் கட்டி காத்த நம் கழகத்தை மேலும் வலிமைப்படுத்த, மேலும் ஒரு கோடி உறுப்பினர்கள் சேர்க்க "உடன்பிறப்புகளாய் இணைவோம்" என்ற மாபெரும் முன்னெடுப்பு கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட உள்ளது. ஏற்கனவே, ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்ட பேரியக்கத்தில், புதிதாக மேலும் ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்க்கும் பெருமுயற்சியை ஏப்ரல் 3 ஆம் தேதியன்று தொடங்கி, ஜீன் 3, 2023 தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடங்குவதற்குள் இப்பணியை நிறைவேற்றுவதென இக்கூட்டம் நிறைவேற்றிடும் வகையில், துண்டறிக்கைகள் மூலமாகவும், திண்ணைப் பிரச்சாரங்கள் மூலமாகவும், முக்கிய இடங்களில் முகாம்கள் அமைப்பது மூலமாகவும், வீடு தோறும் தேடிச் சென்றும் புதிய உறுப்பினர்களைச் கழகத்தில் இணைத்திடுவோம்." என கழகத்

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கடந்த 22.3.2023 அன்று நடைபெற்ற 'தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்' நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி,

2023 ஏப்ரல் 3ஆம் தேதி முதல் 2023 ஜீன் 3ஆம் தேதி வரை, "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவளவிழா ஆண்டு" உறுப்பினர்களை சேர்த்தல் பணிகளை" உடன்பிறப்புகளாய் இணைவோம்" என்ற மாபெரும் முன்னெடுப்புடன் ஒரு கோடி புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. கழகத் தோழர்கள் மற்றும் நிர்வாகிகளும் மேற்குறிப்பிட்ட தேதி முதல் உறுப்பினர்களை சேர்க்கும் பணியினைத் தொடங்கி, உடனுக்குடன் படிவங்களை தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்தனர்.

அவ்வாறு தலைமைக் கழகத்தில் வரப் பெற்ற படிவங்கள் முறைப்படி பரிசீலனை செய்யப்பட்டு, புதியதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை தலைமைக் கழகம் தயாரித்துள்ளது.

முதற் கட்டமாக, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட இரசீது எண். 1 முதல் எண்.1000 வரை இப்புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் கடந்த

7-11-2023 முதல் 10-11-2023 தேதிகளில் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து;

தற்போது, இரண்டாவது கட்டமாக, **தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட இரசீது எண். 1001 முதல் 2100 வரை எண் கொண்ட இரசீதுகள்** வைத்திருப்போர் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இருக்குமேயானால், அந்த ஒரிஜினல் இரசீதையும், தங்களிடம் உள்ள உறுப்பினர் சேர்த்தல் பட்டியலையும், **2023 டிசம்பர் 27ஆம் தேதி முதல் 30ஆம் தேதிக்குள்**, தலைமைக் கழகத்திற்கு நேரில் வந்து, இரசீது எண்ணையும், பட்டியலையும் சரி பார்த்து பெற்றுச் செல்ல வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புதிய உறுப்பினர்களை சேர்த்து பணம் செலுத்தி இரசீது பெற்றவர்கள், நேரில் வந்து உறுப்பினர் சீட்டுகள் பெற முடியாத நிலை ஏற்படுமாயின், அவர்களால் நியமித்து அனுப்பப்படும் முகவரிடம், தாங்கள் கைப்பட எழுதிய பரிந்துரை கடிதமும், ஒரிஜினல் இரசீதையும் கொடுத்து புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம். இரசீதின் ஜெராக்ஸ் நகல் ஏற்றுக் கொள்ளப்படாது.

புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை, தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொண்டவர்கள், உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை உரியவரிடம் ஒப்படைத்து, அதற்குரிய அத்தாட்சி கடிதத்தை பெற்று, அக்கடிதத்தினை ஒருவார காலத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு கண்டிப்பாக அனுப்பி வைத்திட வேண்டும்.

### உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கப்படும் மாவட்டங்கள்
### தலைமைக் கழக இரசீது எண். 1001 முதல் 2100 வரை

1) சென்னை வடக்கு
2) சென்னை வடகிழக்கு
3) சென்னை கிழக்கு
4) சென்னை மேற்கு
5) சென்னை தென்மேற்கு
6) சென்னை தெற்கு
7) திருவள்ளூர் கிழக்கு
8) திருவள்ளூர் மேற்கு
9) காஞ்சிபுரம் வடக்கு
10) காஞ்சிபுரம் தெற்கு
11) விழுப்புரம் வடக்கு
12) கள்ளக்குறிச்சி தெற்கு
13) கடலூர் கிழக்கு
14) கடலூர் மேற்கு
15) தஞ்சை தெற்கு
16) திருவாரூர்
17) திருச்சி தெற்கு
18) பெரம்பலூர்
19) அரியலூர்
20) தருமபுரி கிழக்கு
21) தருமபுரி மேற்கு
22) கிருஷ்ணகிரி கிழக்கு
23) சேலம் கிழக்கு
24) சேலம் மத்திய
25) திருப்பூர் வடக்கு
26) ஈரோடு வடக்கு
27) நீலகிரி
28) மதுரை வடக்கு
29) மதுரை தெற்கு
30) தேனி தெற்கு
31) விருதுநகர் வடக்கு
32) தென்காசி வடக்கு
33) தென்காசி தெற்கு
34) தூத்துக்குடி வடக்கு

**குறிப்பு:** தலைமைக் கழக இரசீது எண். 2100 க்கு மேல் உள்ள இரசீதுகளுக்கான உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கும் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.


நாள் : 27.12.2023
இடம் : கலைவாணர் அரங்கம்,
சென்னை
ஆதி திராவிடர் மற்றும்
பழங்குடியினர் நலத்துறை சார்பில்
புதிய திட்டங்களை தொடங்கி வைத்து
பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி
சிறப்புரையாற்றிட வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே வருக! வருக!!
அன்புடன் வரவேற்கும்
என்.கயல்விழி செல்வராஜ் M.Com., B.Ed.,
அமைச்சர் – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
Star Digital 044 - 43 55 48 47

# ‘மிக்ஜாம்’ புயல் பேரிடர்: முதல்வரிடம் குவியும் நிவாரண நிதி!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வக்ஃப் வாரியத் தலைவர் அப்துல் ரஹ்மான் மற்றும் உறுப்பினர்கள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் ப. அப்துல் சமது, திருமதி பாத்திமா முசாபர், முகமது பஷீர், எம்.கே. கான், சையது ரேகான் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 30 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி.ரீட்டா ஹரீஷ் தக்கர் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், எல்&டி நிறுவனத்தின் துணை செயல் தலைவர் எம்.வி. சதீஷ், மண்டல மேலாளர் கே.ஜி. சத்தியநாராயணன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 3 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், டி.எஸ்.எஃப். குழுமத்தின் இயக்குநர் ஸ்ரீவட்ஸ் ராம் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 2 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், கேப்லின் நிறுவனத்தின் தலைவர் பார்த்திபன் மற்றும் இயக்குநர் தீனதயாளன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பிரசன்ன குமார் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் சார்பில் 2 கோடி ரூபாயும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனப் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளத் தொகையான 2 கோடியே 30 இலட்சம் ரூபாயும், என மொத்தம் 4 கோடியே 30 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், ஹூண்டாய் இந்தியா நிறுவனத்தின் தலைமை உற்பத்தி அதிகாரி சி.எஸ். கோபாலகிருஷ்ணன், மூத்த செயல் இயக்குநர் ஜே.எச்.லீ, துணைத் தலைவர் டி. சரவணன், கள தலைவர் எஸ். விஜயபாஸ்கர் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 2 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், முருகப்பா குழுமத்தின் முழு நேர இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் முத்து முருகப்பன், மூத்த துணைத் தலைவர் டி. கண்ணன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 2 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், செட்டிநாடு குழுமத்தின் தலைவர் எம்.ஏ.எம்.ஆர். முத்தையா சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், வி.என்.சி. நிறுவனத்தின் மேலாண்மை பங்குதாரர் சி. பாஸ்கர் மற்றும் நிர்வாக குழுவினர் எல். அரிஹரபுத்திரன், அமித் சிங், பிரசாந்த் சின்ஹா, கவுஷிக் தத்தா ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



அண்மையில் பெய்த அதிகனமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் தூத்துக்குடி மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டது. அந்த மாவட்டத்தில், மீட்பு நிவாரணம் சீரமைப்பு பணிகளை கழக அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், மழையால் ஏற்பட்ட பாதிப்புகளையடுத்து தற்போது உள்ள சூழல், அடுத்து மேற்கொள்ள வேண்டியப் பணிகள் குறித்து, அமைச்சர்கள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அரசு அதிகாரிகளுடன் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தின் போது, வெள்ளப்பாதிப்பு தொடர்பான கணக்கெடுப்பை விரைந்து முடிக்கவும், வெள்ளத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகள் பயிர்ச்சேதம், முழுமையாகவும் பகுதியாகவும் இடிந்த வீடுகள், உயிரிழந்த கால்நடைகள் ஆகியவற்றுக்கு உரிய நிவாரணம் வழங்குவது பற்றியும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டார். குறிப்பாக, மாவட்டத்தில் ஆய்வுப்பணிகளின் போது பொது மக்கள் அளித்த கோரிக்கை மனுக்களை தொகுத்து முதலமைச்சர் அவர்களின் கவனத்துக்கு கொண்டு செல்வது, மாவட்டத்தில் உள்ள ஏரிகள் மற்றும் குளங்களை தூர் வாருவது பற்றியும் கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர். இந்நிகழ்வில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, அமைச்சர்கள் கீதா ஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், ஆர்.காந்தி, பி.மூர்தத்தி மற்றும் அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

### தமிழ்நாட்டு அரசியலை பிறகு விமர்சிக்கலாம்!

# முடங்கிக் கிடக்கும் புதுச்சேரியை மீட்டெடுங்கள்!

## தமிழிசைக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா கண்டனம்!

புதுச்சேரி, டிச. 27 -

முடங்கிக் கிடக்கும் புதுச்சேரியை மீட்டெடுத்த பின் தமிழ்நாட்டு அரசியல் பற்றி பேசுங்கள் என்று துணை நிலை ஆளுநருக்கு கண்டனம் தெரிவித்து, புதுச்சேரி கழக அமைப்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா அறிக்கை வெளியிட்டுள்ளார். அவரது அறிக்கை வருமாறு:



பாரதிய ஜனதா கட்சி ஆளாத மாநிலங்களில் குறிப்பாக தமிழ்நாடு, தெலுங்கானா, கேரளா, மேற்குவங்கம், கர்நாடகா, புதுடெல்லி, புதுச்சேரி போன்ற மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிற்கு எதிராக ஆளுநர்களை களத்தில் இறக்கி அரசியல் செய்வதும், ஆட்சியாளர்களுக்கு நெருக்கடி கொடுப்பதையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு வழக்கமாக கொண்டுள்ளது என்பது நாடறிந்த உண்மை.

இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் கடந்த நிலையில் ஆட்சியாளர்களுக்கும், ஆளுநருக்குமான அதிகாரம் குறித்து நீதிமன்றம் மூலம் தீர்வுகாணும் அவலநிலை ஏற்பட்டதற்கு காரணம் பா.ஜ.க.தான். மாநில அமைச்சரவையின் ஆலோசனைப்படி தான் ஆளுநர்கள் செயல்பட வேண்டும் என்றும் ஆளுநருக்கு தனியாக அதிகாரமில்லை என்றும் உச்சநீதிமன்றமே பல முறை குட்டு வைத்தும், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி ஆளுநர்களுக்கு உரைக்கவில்லை என்றால் என்ன செய்வது.

புதுச்சேரி பொறுப்பு துணைநிலை ஆளுநர் தமிழிசை தான் இன்னும் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் என்ற நினைப்பிலேயே தினம் தினம் அரசியல் விமர்சனம் செய்து வருகிறார். அதில் பழையபடி தமிழ்நாட்டில் தாமரை மலர்ந்தே தீரும் என்ற துருபிடித்த வார்த்தை மட்டும் தான் இல்லை. மற்றபடி அவர் பா.ஜ.க. தலைவராக இருந்தபொழுது என்னவெல்லாம் அரசியல் பேசினாரோ அதே பேச்சை தான் ஆளுநராக இருக்கும் இன்றும் பேசி வருகிறார். ஆளுநர் என்ற பதவியின் கவுரவத்தையும், தகுதியையும் குழிதோண்டி புதைத்து வருகிறார்.

கடந்த வாரம் சென்னை மழைவெள்ளம் பற்றி பேச வந்தவர் தமிழ்நாடு அரசு மீது கவிதை மழை பொழிந்தது அனைவரும் அறிந்ததே. அதுவே ஆளுநர் கடைபிடிக்கும் அநாகரிகத்தின் உச்சமாகும். இன்று தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழையும், வெள்ளமும் எவரும் எதிர்பார்க்காத ஒரு பேரிடர் ஆகும். அதிலே மூக்கை நுழைத்த தமிழிசை திராவிட மாடல் அரசு திண்டாடுவதாகவும், தென் மாவட்டங்களை தி.மு.க. அரசு மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் நடத்துவதாகவும், வெள்ளத்தை கையாள்வதில் அரசு தோல்வி கண்டதாகவும் நாகூசாமல் கூறியது எவ்வளவு பெரிய மோசடித்தனம்.

சென்னை வெள்ளத்தை சமாளித்து திறம்பட மக்களை மீட்டெடுத்த தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய குழுவே பாராட்டியது என்பது தமிழிசையின் பார்வைக்கு தெரியவில்லை போலும். ஒரே நாளில் 95 செ.மீட்டர் மழையை பெற்ற தென் மாவட்டங்களில் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அதிகாரிகள் இரவு, பகலாக மீட்புப் பணியில் ஈடுபட்டு சகஜ நிலைக்கு கொண்டு வந்ததை நாடே பார்த்துக் கொண்டிருக்கிறது. ஏன் இந்த துணை நிலை ஆளுநருக்கு மட்டும் அது தெரியவில்லை.

இவ்வளவு பேசும் தமிழிசையே நீங்கள் பொறுப்பில் உள்ள இந்த புதுச்சேரியின் யோக்கியதை என்ன?. தலைமைச் செயலர், துறை செயலர் உள்ளிட்ட எந்த அதிகாரியும் வேலையே செய்வதில்லை என்று உங்களை மேடையில் வைத்துக் கொண்டே முதல்வர் ரங்கசாமி குற்றப்பத்திரிகை வாசித்தாரே. நீங்கள் தானே புதுச்சேரி மாநில தலைமை நிர்வாகி. என்ன நடவடிக்கை எடுத்தீர்கள். இதற்கு முன்பே சட்டப் பேரவைத் தலைவர் அதிகாரிகளின் செயல்பாடு அரசுக்கு எதிராக இருக்கிறது என்று எச்சரித்தாரே. தினம் தினம் நிர்வாகம் முடங்கிக் கிடப்பதாக ஆளும் அரசு புலம்புகிறதே. உங்கள் பதில் என்ன அதற்கு.

புதுச்சேரி நகர் பகுதி நிலத்தடியில் கடல் நீர் உட்புகுந்து உப்பு தன்மை கலந்துவிட்டதும், இன்னும் சிறிது காலத்தில் கிராமப் பகுதியிலும் நிலத்தடி நீர் உப்பு கலந்துவிடும் நிலையால் குடிநீர் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இதற்காக ஏதேனும் நீங்கள் கவலைப் பட்டீர்களா?.

புதுச்சேரியில் உள்ள 85 ஏரிகளின் நிலை குறித்தோ, 8 படுகை அணைகளின் பராமரிப்பு குறித்தோ, 400 குளங்கள் பறிபோனது பற்றியோ உங்களுக்கு யாதாவது அக்கறை உண்டா?.

போக்குவரத்து நெரிசல் நாளுக்கு நாள் அதிகரித்து மக்கள் அல்லல்படுவதை தீர்க்கவோ, நெரிசலை தவிர்க்க ரூ. 30 கோடியில் பாதியில் நிற்கும் உப்பனாறு மேம்பாலத்தை முடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டீரா?.

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் படித்து வேலைக்காக அண்டை மாநிலங்களில் தஞ்சம்புகும் அவலத்தை போக்குவதற்கான முயற்சி உண்டா?.

அரசுத்துறையில் காலிப் பணியிடங்களை நிரப்ப ஏதாவது முயற்சி உண்டா?

சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் குவிகிறார்களே அவர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் உண்டா?.

அவசர கோலத்தில் ஒன்றிய அரசின் புதிய கல்வித் திட்டத்தை மாணவர்களுக்கு திணித்தாயே. அதனை முன்னெடுக்க சரியான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் உண்டா?.

100 நாள் வேலை 20 நாள் வேலையாக சுருங்கிக் கிடக்கிறதே அதை மீட்டெடுக்கும் வழிவகை உண்டா?.

கடல் அரிப்பில் இருந்து மீனவ மக்களை காப்பாற்ற விரிவான திட்டம் உண்டா?.

புதுச்சேரி - திண்டிவனம், புதுச்சேரி - சென்னை, புதுச்சேரி - காரைக்கால் இரயில் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை உண்டா?.

அட்டவணை இனத்தவர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற சிறப்புக்கூறு நிதி மடைமாற்றி விடப்படுகிறதே. அதுபற்றி கவலை உண்டா?.

வேலைவாய்ப்பை உருவாக்க புதிய தொழிற்சாலைகள் உருவாக்க சிந்தித்தது உண்டா?.

புதுச்சேரியில் உற்பத்தி நிறுவனங்களாக இருந்து பல ஆயிரம் தொழிலாளர்களுக்கு வாழ்வளித்த ரோடியர், சுதேசி, பாரதி மில்கலை மீட்டெடுக்க நடவடிக்கை உண்டா?.

ரேஷன் கடைகளை திறந்து மக்களுக்கு தரமான அரிசி வழங்க நடவடிக்கை உண்டா?

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் ரூ. 944 கோடிக்கு 96 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு உள்ளதாகவும், இதுவரை ரூ. 356 கோடி ஒதுக்கப்பட்டு ரூ. 44 கோடிக்கு 31 பணிகள் முடிந்துள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது என்றால் மீதி பணிகள் மற்றும் அதற்கு ஒதுக்கப்பட்ட நிதி என்னவாயிற்று என்று கவலைப்பட்டீரா?.

கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டெழுந்த மக்களுக்கு ப்ரீபெய்டு மின் கட்டண திட்டத்திற்கு அனுமதியளித்து பேரதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளீர்களே நியாயமா?

புதுச்சேரியில் ரெஸ்டோ பார்கள், மசாஜ் சென்டர்கள், ஸ்பா போன்றவை மூலம் கலாச்சாரம், பெண்கள் பாதுகாப்பு சீரழிக்கப்பட்டுள்ளதைப் பற்றி ஆளுநருக்கு கவலையில்லையா?.

இளைஞர்கள், மாணவர்கள் நாள்தோறும் சீரழிந்துவருவதற்கு காரணமாக இருக்கும் கஞ்சாவை ஒழிக்க உறுதியான நடவடிக்கை உண்டா?.

இதையெல்லாம் தாண்டி பெஸ்ட் புதுச்சேரியை ஃபாஸ்ட் புதுச்சேரியாக மாற்றவதாக கூறுகிறாயே அதற்கான புதிய முயற்சிகள் உண்டா?.

16-வது நிதிக்குழுவில் புதுச்சேரியை சேர்க்காமல் அலட்சியமாக இருந்ததால் புதுச்சேரி மாநிலம் மிகப் பெரிய நிதி இழப்பும், பொருளாதார வளர்ச்சியும் தடைபடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது பற்றி கவலை உண்டா?.

இப்படி எண்ணற்ற சவால்கள் புதுச்சேரி மாநிலத்தில் இருக்கும் நிலையில் இதில் எல்லாம் கவனம் செலுத்தாமல் தமிழ்நாட்டு அரசியலில் தலையை நுழைப்பதற்கு உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது. முதலில் ஆளுநர் என்ற கடமையை ஆற்ற முயலுங்கள். பிறகு அரசியலுக்கு வரலாம். உங்கள் ஆளுநர் பதவியை துறந்துவிட்டு அரசியல் அரங்கிற்கு வந்தால் நாங்களும் அதனை வரவேற்க தயாராக இருக்கிறோம். வரும் தேர்தலில் ஆவது நீங்கள் டெபாசிட் வாங்குவதை உறுதிச் செய்ய பாருங்கள்.

இவ்வாறு இரா.சிவா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



கோவை மாவட்டம் சூலூர் தாலுகா பட்டணம் ஊராட்சியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தொடங்கி வைத்தார். பட்டணம் ஊராட்சி மன்றத் தலைவர் கோமதி செல்வக்குமார் குத்து விளக்கு ஏற்றினார். இவ்விழாவில் இலக்கிய அணி பட்டணம் செல்வகுமார், வள்ளி, ஒன்றியக் குழு உறுப்பினர் ரகு துரைராஜ் மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

# தி.மு.க.விற்கு அறிவுரை பா.ஜ.க.வா?

**மி**க்ஜாம் புயல் இதுவரை வரலாறு காணாத அளவிற்கு பெரும் மழையாக பெய்து சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களை உருக்குலையச் செய்து விட்டது. முதல்வர் அவர்கள் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் உயிர்சேதம் ஒப்பீட்டளவில் 2015 மழையில் உயிரிழப்பு சுமார் 300 பேர் தற்போது மிகவும் குறைவு தான். பெய்த மழையோ 2015யை விட தற்போது பலமடங்கு.

20 அமைச்சர்கள், ஆயிரக்கணக்கான மின் ஊழியர்கள், மருத்துவர்கள், தூய்மைப் பணியாளர்களை வைத்து தானும் ஓய்வின்றி உறக்கமின்றி இறுக்கமான மனநிலையோடு மக்கள் துயர் துடைக்க உழைத்தார் நம் முதல்வர் அவர்கள். ஒவ்வொரு ரேசன் அட்டைதாரருக்கும் தலா ரூ.6000 வழங்கப்படும் என்றும் மற்ற நிவாரணங்களும் முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். உடனடி நிவாரணத் தொகை ரூ.5060 கோடி வழங்க வேண்டும் என ஒன்றிய அரசிடம் கோரினார். அதன் பிறகு தற்போது மத்திய குழுவெல்லாம் வந்து பார்த்துவிட்டு சென்ற பிறகு 12,659 கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். தற்போது தென் மாவட்ட மழை சீரழிவிற்கு முதல்வர் நேரில் சென்று பார்வையிட்டு ஆறாயிரம் ரூபாய் மற்றும் ஆயிரம் ரூபாய் என்றும் பாதிப்புகளுக்கு ஏற்ப மற்ற நிவாரணங்களும் அறிவித்துள்ளார். ஒன்றிய அரசிடம் உடனடியாக ரூ.2 ஆயிரம் கோடி வழங்கிடவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிபர்ஜாய் புயல் குஜராத்தை தாக்கியது, இது மிக்ஜாம் புயலை விட வலுவானது அல்ல. பிரதமர் மோடி உடனடியாக குஜராத்திற்கு பறந்தோடி சென்றார். பார்த்த இரண்டாம் நாள் ரூ.1000 கோடி அறிவித்தார். அதுமட்டுமில்லாமல் பேரிடர் நிவாரண நிதியென மேலும் ரூ.338.24 கோடி ரூபாய் வழங்கியுள்ளார். இதே போல் ஒரிசா மாநிலத்திற்கும் ஆயிரம் கோடி பிரதமர் மோடி உடனே அறிவித்தார். அது இல்லாமல் பேரிடர் நிவாரண நிதி வேறு. தமிழ் நாட்டிற்கோ வாரணாசி அல்வாதான்.

இதேபோல் இமாச்சலப்பிரதேசத்தில் நிலச்சரிவு ஏற்பட்ட போது உடனடியாக ஒன்றிய அரசு இரண்டு தவணையாக ரூ.360.80 கோடி வழங்கியதோடு தற்போது மேலும் ரூ.633.73 கோடி அறிவித்துள்ளது. இமாச்சலபிரதேச பாதிப்புக்கு மனித நேய உணர்வோடு ரூ.10 கோடி நம்முதல்வர் மு.க.ஸ்டாலின் தளபதி அவர்கள் வழங்கினார்கள். குஜராத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டபோதும் அதிகம் உதவிகள் செய்த மாநில மக்கள் தமிழர்கள்தான். நாட்டிற்கு ஆபத்து ஏற்படுத்திய கார்கில் போருக்கு இந்தியாவிலேயே அதிக நிதியாக ரூ.50 கோடி வழங்கியது தலைவர் கலைஞர் அவர்கள் தான்.

ஆனால் 2015 முதல் பல பேரிடர்களை சந்தித்தது தமிழ்நாடு. அதற்கு நிவாரணமாக அன்றைய பா.ஜ.க.விற்கு இணக்கமான தமிழ்நாடு அரசு கேட்டது ரூ.1,27,655.80 கோடி. ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொடுத்த தொகை ரூ.5884.49 கோடி மட்டுமே. அதாவது 4.61 விழுக்காடு மட்டுமே. இப்படி பா.ஜ.க. அரசால் தொடர்ந்து வஞ்சிக்கப்படும் மாநிலமாக விளங்கி வருவதுதான் தமிழ்நாடு.



**வி.பி. கலைராஜன்**
கழக இலக்கிய
அணிச் செயலாளர்

அந்த வேலையை போல் தான் தற்போது மிக்ஜாம் புயலுக்கும் கேட்ட நிவாரணத் தொகையில் பத்து சதவீதத்திற்கு குறைவாக மட்டுமே தந்துள்ளனர். ஜி.எஸ்.டி நிதி தமிழ்நாடு தருவது ரூ.10,225 கோடி, மத்தியபிரதேசம் தருவது ரூ.3646 கோடி, பேரிடர் நிவாரண நிதி தமிழ்நாட்டிற்கு ரூ.64.65..., உத்திரபிரதேசத்திற்கு ரூ.214.39... இதில் வஞ்சிக்கப்படுவது தமிழ்நாடு இல்லையா? பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு கரும்பு வெல்லம் தமிழ்நாட்டிற்கு கரும்பு சக்கையா? இது எந்த விதத்தில் நியாயம்?

இப்படி வஞ்சிக்கப்படாமல் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கேட்ட நிவாரணத் தொகையை உடனே வழங்க வேண்டும். நாங்கள் மக்கள் பணத்தைத் தான் கேட்கிறோம். அதை கொடுக்க ஏன் பாரபட்சம் என்று மக்கள் படும் வேதனையை நேரில் பார்த்த உணர்ச்சி பெருக்கால் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டார்கள். அவர் பாணியே தனி. சொன்ன வார்த்தையில் பின்வாங்காமல் இருக்கும் அவரது உறுதியைப் பார்த்த பின்னும் எப்படி உதயநிதி அதட்டிக் கேட்கலாம் என்கிறார் ஆளுநர் தமிழிசை. தற்போது பொறுப்பு மிக்க ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆவேசமாக அரசியல் பேசியுள்ளார். மாநிலத்திற்கு தர வேண்டிய பேரிடர் நிதியைத்தான் தந்துள்ளனர், கூடுதலாக ஒன்றும் தரவில்லை. மக்கள் பணத்தைத்தான் மக்களுக்காக கேட்கிறோம். வெள்ள நேரத்தில் முதல்வர் டெல்லி வரலாமா? என்று அம்மையார் கேட்டுள்ளார்.

வருடக்கணக்கில் இனப்படுகொலை நடந்து வரும் பா.ஜ.க. ஆளும் மணிப்பூருக்கு பிரதமர் மோடியாவது இதுவரை சென்றாரா? வரலாறு காணாத மழையால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கு பிரதமர் மோடி வந்தாரா? இவர் இந்தியாவிற்கு பிரதமரா அல்லது வாரணாசிக்கு மட்டும் பிரதமரா? தமிழ்நாடு கேட்ட நிதியை யாவது தந்தாரா? ஏதோ போனப் போக்கில் பிரதமரை முதல்வர் பார்த்தாராம் அம்மையார் கொக்கரித்துள்ளார். சந்திக்க நேரம் கேட்டு பிரதமர் மோடி இரவு 10.30 மணிக்கு ஒதுக்கித் தந்து பிறகு 20 நிமிடங்கள் விவரங்களை கூறிவிட்டு நிதியையும் கேட்டபின் தென்மாவட்டங்களுக்கு உடனே சென்றார் முதல்வர். ஏற்கனவே அமைச்சர்கள் அங்கே அனுப்பப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இதை மறுத்து தேசிய பேரிடர் குழு சென்றபின் தான் அமைச்சர்களே சென்றார்கள் என்று அம்மையார் பொய்களை அள்ளிவிட்டுள்ளார். மக்களுக்கு தெரியும் முதல்வரின் மக்கள் அக்கறை. தமிழ் பெண் ஆயிற்றே வானம்பாடியாக வேண்டாம், வசவு வார்த்தை கூறாதவராக இருப்பார் என்று நினைத்தால் மிகப் பெரிய வசன வியாபாரியாக அல்லவா இருக்கிறார். சரி அம்மையாரே தமிழ் மக்கள் மீது அக்கறையிருந்தால் தர்க்கம் வேண்டாம், கேட்ட நிதியை தருவதற்கு முயலுங்கள்.

“செய் அல்லது செத்து மடி” என்றார் காந்தி அடிகள். உங்களுக்குத் தான் காந்தியை பிடிக்காதே, நீங்கள் சாவர்க்கரின் தத்து பிள்ளைகள் ஆயிற்றே! காந்தியாரின் முதல் சொல் செய் என்பதை எடுத்துக் கொண்டு தமிழ்நாட்டிற்கு செய்யுங்கள் அரசியலை அப்புறம் வைத்துக் கொள்ளலாம்.

பக்தியுள்ள பிராமணர் அல்லாத தமிழர்கள் தங்களை சனாதனிகள் என்று சொல்லிக் கொள்வதில்லை என்று அண்ணல் அம்பேத்கர் கூறியுள்ளார். அதையே தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழிமொழிந்து எழுதியுள்ளனர். இதைத்தான் சகோதரர் உதயநிதி குறிப்பிட்டுப் பேசினார். இது திராவிட இயக்க கொள்கை.

இன்றைக்கு உதயநிதி ஸ்டாலின் அவர்களைப் பற்றி பேசும் தமிழிசைக்கு சனாதனத்தைப் பற்றிப் பேசிய அம்பேத்கரை விமர்சித்துப் பேசிட துணிச்சல் உண்டா? ஏன் பிரதமர் மோடியோ, அமித்ஷாவோ அம்பேத்கர் கூறியது முட்டாள்தனமானது என்று தைரியமாக கூறுவார்களா?

அமைச்சர் உதயநிதி என்ன தவறாக பேசினார்? அகமதாபாத்தில் கிரிக்கெட் விளையாடிய பாகிஸ்தான் வீரர்களைப் பார்த்து ஜெய் ஸ்ரீராம் என்று கோஷத்தை எழுப்பி கிண்டல் செய்தனர். இது நியாயமான செயலா? விளையாட்டு நாடுகளுக்கிடையே நட்புணர்வை வளர்க்கக் கூடியது, வெறுப்பு அரசியலுக்கு வழிவகுப்பது தவறு என்று கண்டித்தார். இதில் அவரது பேச்சின் முதிர்ச்சியைக் காணலாம். இதை தவறென்று தமிழிசை கூறுகிறாரா?

உதயநிதி அவர்களின் தலையை வெட்டினால் ரூ.10 கோடி தருகிறேன் என்ற சாமியார் பா.ஜ.க. வெறியர், பிறகு ரூ.500 கோடி தருகிறேன் என்றார். இத்தனை கோடி ரூபாய் எப்படி வந்தது? அமலாக்கத்துறை அவர் மீது பாய்ந்ததா? இதை நாம் கண்டித்தால் அவர் ஒரு போலி சாமியார் என்று புரூடா விட்டனர். அதாவது பா.ஜ.க. பாணியில் ஜூம்லா தான். இதை தமிழிசை கண்டித்து அறிக்கை விட்டாரா? நிர்மலா அம்மையாராவது கண்டித்தாரா?

ஒரு ஒன்றிய அமைச்சர் உதயநிதியின் நாக்கை அறுப்பேன், கண்களை பிடுங்குவேன் என்று பேசினாரே! இதை மறுக்கிறாரா நிர்மலா அம்மையார்? இல்லை அவரும் போலி ஒன்றிய அமைச்சர் என்கிறீர்களா? இது தான் பா.ஜ.க.வின் இலக்கியப் பேச்சா நிர்மலா தேவியாரே? எங்கள் பணத்தைக் கொடுங்கள் என்று அமைச்சர் உதயநிதி பேசியது குற்றமாம். ஒரு மாநில அமைச்சரை நாக்கை அறுப்பேன் என்று ஒன்றிய அமைச்சர் பேசியுள்ளார் அவர் மீது என்ன வழக்கு போடப்பட்டது? தலையை வெட்டித் தந்தால் ரூ.500 கோடி என்ற சாமியார் மீது என்ன வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அம்மையாரே கூறுவீரா?

பா.ஜ.க.வினர் எதை வேண்டுமானாலும் பேசலாம். அவர்கள் பத்தரை மாற்று தங்கங்கள் - அப்படித்தானே? இதற்கிடையில் தமிழிசைத் தொல்லை வேறு அப்பப்பா தாங்க முடியவில்லை. உங்கள் தந்தை இலக்கியச் செல்வருக்கு எப்படியெல்லாம் மரியாதை கொடுத்தவர் நம் முதல்வர் அவர்களும் கலைஞர் அவர்களும் என்பதை எழுத வேண்டாமென்று விடுகிறேன். நன்றி மறப்பது நன்றன்று தமிழிசைக்கு நன்கு புரியும்.

ஆமாம்; சகோதரி தமிழிசை அவர்களை இத்தனை நாள் ஆளுநர் என்று நினைத்திருந்தோம். அவர் எப்போது பா.ஜ.க. தமிழக தலைவர் ஆனார்? அண்ணாமலை நீக்கப்பட்டு விட்டாரா? என்ன மாய்மாலம்! மாயா ஜாலம்! எவர் எங்கிருக்கிறார் என்பதே தெரியவில்லை. சொறி வந்தவன் சும்மா இருக்க மாட்டான், பழக்கதோஷம் சொறிந்து கொண்டே இருப்பான். அந்த வகையைச் சேர்ந்தவர் தான் தமிழிசை.

ஆளுநர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தமிழிசையே தமிழ்நாட்டிற்கு வந்து தாமரையை வளர்க்கப் பாருங்கள். அப்போதுதான் அண்ணாமலை என்ன செய்வார் என்று தெரியும்? கத்தியை எடுத்து சொறியப் போகிறாரா அல்லது சுழட்டப் போகிறாரா என்பது.

சகோதரி நிர்மலா அம்மையாரே! தமிழிசையே! வரலாறு எங்கள் அமைச்சர் உதயநிதிக்கு நன்கு தெரியும். “எவர்க்கும் அஞ்சுவதில்லை எவனிடத்திலும் சென்று கெஞ்சுவதில்லை” என்ற கொள்கை உடையவர். Youth is hot and bold; Old is weak and hold இது ஷேக்ஸ்பியர் கூறியது. நீங்கள் இருவரும் Old மறந்து விடாதீர்கள். நிதியமைச்சர் மற்றும் ஆளுநர் பதவியில் இருந்து கொண்டு அரசியல் பேசி களங்கம் ஏற்படுத்தாதீர்கள்.

அறிஞர் அண்ணா மீது வாஜ்பாய்க்கு அளவற்ற பாசம். அதனால் தான் வாஜ்பாய் பிரதமராக இருந்த போது அவரது கவிதை நூலை அண்ணா மறைந்த பல நாட்களுக்குப் பிறகும் அவருக்கு மறவாமல் சமர்ப்பித்தார். அதனால் தான் Good person in a bad party என்று கூறிவிட்டு 13 நாட்களிலும் 13 மாதங்களிலும் பறி கொடுத்த வாஜ்பாய் ஆட்சியை 5 ஆண்டுகளும் தொடர ஆதரவு தந்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். நிதியமைச்சர் அம்மையாரே வரலாறு தெரிந்து கொள்ளுங்கள்.

மொரார்ஜிதேசாய் துணை பிரதமர். அவரிடம் வறட்சி நிவாரணப் பணம் கேட்கப் போகிறார் முதல்வர் கலைஞர், மொரார்ஜி கோபத்துடன் என்ன வேண்டும் என்கிறார். வறட்சி; அதற்கு தமிழ்நாட்டிற்கு ரூ.5 கோடி வேண்டுமென்கிறார் கலைஞர். மொரார்ஜி ‘பணம் காய்க்கும் மரம் என்னிடம் இல்லை’ என்கிறார் அலட்சியமாக, உடனே கலைஞர் ‘அது எங்கும் இல்லை என்பது எங்களுக்கும் தெரியும்’ என்று மூஞ்சியில் அடித்தது போல் பதில்தந்து விட்டு எழுந்து வந்து விட்டார். பிறகு மொரார்ஜி தான் இறங்கிப் போய் கலைஞர் கேட்ட தொகையைக் கொடுத்தார். இது நடந்த வரலாறு. இதில் கலைஞர் கேட்டது மொரார்ஜி வீட்டுப் பணத்தை அல்ல! கலைஞரின் அணுகுமுறையும் வேகமானது தான்.

அதைத்தான் அமைச்சர் உதயநிதி ஒன்றிய அரசிடம் கேட்டுள்ளார். அன்று கலைஞர் கேட்ட முறையில்தான் இன்று அவரது பேரன் உதயநிதி கேட்டுள்ளார். இதிலென்ன குற்றத்தைக் கண்டு விட்டீர் அம்மையாரே! எங்கள் மாநில உரிமையை அப்படித்தான் கேட்பார் அமைச்சர் உதயநிதி. உங்கள் ஆலோசனை எங்களுக்குத் தேவையில்லை. முப்பது வயது கலைஞராகத் தான் அமைச்சர் உதயநிதி செயல்படுகிறார். அவருக்குப் பின்னால் ஓர் மாபெரும் இயக்கம் இருக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்களிடம் காங்கிரஸ் உறுப்பினர் விநாயகம் Your days are numbered என்ற போது My steps are measured என்று சொன்னவர் அண்ணா. அதே விநாயகம் தலைவர் கலைஞருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட போது தலை (அண்ணா) இருக்க வால் ஆடலாமா என்று கேட்டபோது உடனே கலைஞர் அவர்கள் காங்கிரஸ் கட்சியில் விநாயகம் தலையா அல்லது வாலா கூறுவாரா என்று மடக்கினார். கலைஞர் அவர்களின் பரிணாமம் அப்படித்தான் இருக்கும்.

இப்படிப்பட்ட பாரம்பரியத்தில் வழித்தோன்றலாய் வந்த அமைச்சர் உதயநிதியைப் பார்த்து பேசக் கற்றுக் கொள்ளுங்கள் என்று கூறும் அம்மையாரே நீங்கள் நன்றாக தமிழ் பேசுகிறீர்கள், ஆனால் நல்ல தமிழாகத் தான் பேச மறுக்கிறீர்கள். பா.ஜ.க.வினர் அறிவுரை சொல்லி கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. தி.மு.க எழுத்தால் பேச்சால் வளர்ந்த கழகம்.

கலைஞர் திரைப்படத்தில் கதை வசனம் எழுதி அவர் முதல்வர் ஆவதற்கு முன்பே கோபாலபுரம் வீட்டை வாங்கியவர். கார் வைத்திருந்தவர். எம்.ஜி.ஆர் 150 ரூபாய் சம்பளம் வாங்கிய போது ரூ.5000 வாங்கியவர் கலைஞர். அவர் அறிவால் உழைப்பால் உயர்ந்தவர். அவரது மகன் முதல்வரின் மறு பெயரோ உழைப்பு. உதயநிதி உடனே சென்று சேற்றிலும் மழையிலும் நின்று தென்மாவட்டங்களில் மக்கள் பணியாற்றினார். அவர்களுக்கா உழைப்பைப் பற்றி சொல்லுகிறீர்கள்?

‘மாற்றம் ஒன்று தான் மாறாதது’ என்றார் காரல் மார்க்ஸ். தேசிய பேரிடர் என்று அறிவிப்பது வழக்கத்தில் இல்லை என்கிறீரே ஐ.பி.சி, சி.ஆர்.பி.சி. இந்திய ஏவிடன்ஸ் சட்டம் என்பதை எல்லாம் மாற்றி இந்தியில் பெயர் வைத்துள்ளீர்களே அதை செய்யும் போது இதையும் செய்யலாமே! மாநிலங்கள் இல்லையென்றால் ஒன்றியம் இல்லை. அதை அறிந்து தேசிய பேரிடராக அறிவியுங்கள், அப்புறம் பேசுங்கள்.

**“சீதாவின் ராமனை தெறிக்கவிட்ட பெரியார் பேரன் உதயநிதி!**
**நிர்மலா சீதாராமனை நேர்கொள்ளும் நெஞ்சினர் உதயநிதி!**
**அண்ணாவின் படைப்புகளில் அறிவாற்றல் வளர்த்தவர் உதயநிதி!**
**கலைஞரின் பராசக்தியில் பகுத்தறிவு பயின்றவர் உதயநிதி!**
**தளபதியார் வழியில் திராவிடத் தாலாட்டு கேட்டவர் உதயநிதி!**
**அம்மையே அடக்குவீர் நாவை! கொடுப்பீர் கோரிய நிதியை!!**



திருச்சி ஏர்போர்ட்டில் விரைவில் பயன்பாட்டுக்கு வரவிருக்கும் பன்னாட்டு விமான நிலையத்தை கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு பார்வையிட்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், காவல்துறை ஆணையாளர் காமினி, மாநகராட்சி மேயர் மு அன்பழகன், மாநகராட்சி கமிஷனர் வைத்தியநாதன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, சேர்மன் துரைராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருநெல்வேலி மாவட்டத்தில் கன மழையினால் பாதிக்கப்பட்டுள்ள சீவலப்பேரி ஆற்றுப்பாலத்தை நேற்று முன்தினம் (25.12.2023) பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வகாப், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர்.மனோகரன், தலைமைப் பொறியாளர்.சந்திரசேகர் (நெடுஞ்சாலைகள் மற்றும் கட்டுமானம்), மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜீ உட்பட பலர் உள்ளனர்.

# 2027-க்குள் இந்தியா மிகப்பெரிய கடன்வலையில் சிக்கும் அபாயம்!

## சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை!

சென்னை, டிச. 27 -

சர்வதேச நாணய நிதியம் இந்திய அரசின் கடன் சுமை குறித்து அண்மையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், 2027க்குள் இந்திய ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளின் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட 100 சதவிகிதம் அதிகரிக்கும்; மிகப் பெரிய கடன் வலையில் இந்தியா சிக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது.

மேலும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள நிதி தேவைப்படும் என்பதால், நீண்டகால கடன்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக எச்சரித்த சர்வதேச நாணய நிதியம், ஒன்றிய நிதி அமைச்சகம் புதிய திட்டங்களை கொண்டு வரவேண்டும் எனவும், தனியார் துறைகளில் முத லீடுகளை அதிகரிக்க வேண்டும் என்றும் கூறியிருந்தது.

ஆனால், ஐஎம்எப்பின் இந்த எச்சரிக்கைக்கு ஒன்றிய நிதிய மைச்சகம் மறுப்பு தெரிவித்தது. "இந்தியாவின் கடன் குறித்து பேசியிருக்கும் ஐ.எம்.எப்., சில விஷயங்களை பாசிட்டிவாக கூறியிருப்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். நாட்டின் பொருளாதார நிலைமை இன்னும் மேம்பட்டால், கடன் 70 சதவிகிதத்திற்கும் குறைவாகவே இருக்கும் என ஐ.எம்.எப். குறிப்பிட்டிருக்கிறது. அதே போல உள்நாட்டு கடன் பற்றி கவலைப்பட வேண்டாம். அதனால் பெரும் ஆபத்து ஏற்படாது. 2020-21 நிதி யாண்டில் 88 சதவிகிதமாக இருந்த கடன், 2022-23 நிதியாண்டில் 81 சதவிகிதமாகக் குறைந்துள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே கடன் குறித்த அச்சம் தேவையற்றது" என்று கூறியிருந்தது.

ஆனால், ஐ.எம்.எப்., எச்சரிக்கை முக்கியமானது. அது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று பொருளாதார ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ஆசிய கண்டத்தில் மிக முக்கியமான வணிக தளமாக இந்தியா இருக்கிறது. இதற்கு காரணம் இங்குள்ள மக்கள் தொகை தான். உலகின் மிக அதிகமாக மக்கள் தொகை கொண்ட இந்த நாட்டில், வாங்கும் சக்தியும் அதிகம். எனவே, உலகின் ஏறத்தாழ அனைத்து உற்பத்தி நிறுவனங்களும் இந்திய சந்தையை கைப்பற்ற போட்டிப்போட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், உண்மையில் இந்திய மக்களின் வாங்கும் திறன் கடந்த சில ஆண்டுகளாக சரிந்துள்ளது. அல்லது, சொல்லிக்கொள்ளும் அளவுக்கு அதிகரிக்கவில்லை. இந்தியாவில் இருக்கும் தங்கம், வைரம், நிலங்கள், விலையுயர்ந்த கார்கள், கட்டடங்கள், ஆடம்பர சொகுசு வீடுகள் என அனைத்து சொத்துக்களிலும் 40 சதவிகிதம், நாட்டின் மக்கள் தொகையில் வெறும் 1 சதவிகிதம் மட்டுமே பெரும்பணக்காரர்களிடம் குவிந்து கிடக்கிறது. இவர்கள்தான் நாட்டின் பெரும் பணக்காரர்கள். மறு புறமோ, நாட்டு மக்கள் தொகையில் சரிபாதியாக உள்ள அதாவது 50 சதவிகித மக்களிடம் வெறும் 3 சதவிகித செல்வம்தான் இருக்கிறது. எனவே, இந்த மக்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்துகிறோம் என்று கூறித்தான் அரசுகள் தொடர்ச்சியாக கடனை வாங்கி குவித்து வருகின்றன. இது ஒரு கட்டத்தில் அபாய கட்டத்தை எட்டும் போது, இந்தியாவும், இலங்கையைப் போல பொருளாதார பிரச்சினையில் சிக்கும் என்பதைத் தான் ஐ.எம்.எப். சூசகமாக எச்சரித்திருக்கிறது என்று பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றக் கழக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு பரிந்துரையை ஏற்று

# சுங்குவார்சத்திரம் லட்சுமி ஜெயசீலனுக்கு மருத்துவ நிதி!

## பிரதமர் அலுவலகம் ஒப்புதல் கடிதம்!

புதுடெல்லி, டிச. 27-

திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான திரு. டி.ஆர். பாலு அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார் சத்திரத்தைச் சேர்ந்த திருமதி லட்சுமி ஜெயசீலன் என்பவரது புற்றுநோய் சிகிச்சைகளுக்காக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து உதவிடுமாறு 17.11.2023 அன்று பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குத் கடிதம் எழுதியிருந்தார்.

டி.ஆர்.பாலு அவர்களின் பரிந்துரையினையும் வேண்டுகோளினையும் ஏற்ற பிரதமர் அவர்கள், திருமதி லட்சுமி ஜெயசீலனின் சிகிச்சைக்காக ரூபாய் 3 லட்சம் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம், டி.ஆர். பாலு எம்.பி. அவர்களுக்கு, 5.12.2023 தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள விவரம் பின்வருமாறு:

பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து, திருமதி லட்சுமி ஜெயசீலன் அவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையான ரூபாய் 3 லட்சமானது அவர் சிகிச்சை பெறும் சென்னையில் உள்ள அடையாறு புற்றுநோய் மையத்திற்குவழங்கப்படும் என்றும், சிகிச்சை முடிந்த பின்னர், உரிய ஆவணங்களின் நகலை பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், ஆவணங்கள் கிடைத்த பின்னர், உதவித் தொகையானது உடனடியாக மேற்குறிப்பிட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சி பன்னாட்டு

# விமான நிலையத்தில் புதிய முனையம்!

## அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு!

திருச்சி, டிச. 27-

திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய முனையத்தை அமைச்சர் கே.என். நேரு பார்வையிட்டார்.

திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் ரூ. 951 கோடியில் புதிய முனையம் அமைக்கும் பணியை கடந்த 2019ஆண்டு பிப். 10 ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி காணொலி காட்சி வாயிலாக தொடக்கி வைத்தார்.

இப் பணிகள் 2021ஆவது ஆண்டு செப்டம்பர் மாதத்துக்குள் முடித்து புதிய முனையத்தை செயல்பாட்டுக்குக் கொண்டு வர விமான நிலைய ஆணையக் குழுமம் திட்டமிட்டிருந்தது. ஆனால், கொரோனா பரவல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பணிகள் முற்றுப்பெறாத நிலையில் 2021, 22, 23 ஆகிய மூன்றாண்டுகளும் தள்ளிப்போயின. அடுத்தடுத்து 2 அல்லது 3 முறை திறப்பு விழாவுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிலையிலும் பணிகள் முடிவடையாததால் திறப்பு விழா நடத்தப்படவில்லை. இதனைத் தொடர்ந்து, கூடுதலான பணியாளர்கள் மூலம் கடந்த சில மாதங்களாக இரவு, பகலாக நடைபெற்ற பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன.

புதிய முனையத்தின் சிறப்பம்சம் : புதிதாக அமைக்கப்பட்டுள்ள முனையம் 60 ஆயிரத்து 723 ச.மீ. பரப்பளவில் 2 அடுக்குகளைக் கொண்ட வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒரே நேரத்தில் 4 ஆயிரம் பன்னாட்டு பயணிகளையும், 1,500 உள்நாட்டு பயணிகளையும் கையாளக் கூடிய வகையில் குடியேற்றப் பிரிவினருக்கான 40 செக் அவுட் மற்றும் 48 செக் கவுன்ட்டர்கள், விமானங்கள் நிறுத்த 10 ஏப்ரான்கள் மற்றும் ஏரோ பிரிட்ஜ் (விமானத்திலிருந்து முனையத்தில் நுழையும் பகுதி), 26 இடங்களில் லிப்ட் மற்றும் நகரும் படிக்கட்டுகள் (எஸ்கலேட்டர்), சுங்கத்துறையினருக்கென 3 சோதனை மையங்கள், 15 இடங்களில் எக்ஸ்ரே சோதனை மையங்கள், 3 இடங்களில் வி.ஐ.பி. காத்திருப்பு அறைகளுடன், விமான நிலைய வளாகத்தில் சுமார் 1,000 கார்களை நிறுத்தும் வகையில் வாகன நிறுத்தம் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் தேசத்தின் நாகரிகம், கலாச்சாரம், பண்பாடுகளை பறைசாற்றும் விதமாக நிலைய வளாகத்தில் வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் போன்ற மாதிரி கோபுரம் புதிய முனையத்தின் முன்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல, வருகை, புறப்பாடு, பயணிகள் காத்திருப்பு அறைகள் போன்ற பகுதிகளில் புதிய அதிநவீன வசதிகளுடன் உள்கட்டமைப்பு மற்றும் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் வகையில் புதிய முனையத்தின் மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர ரூ.75 கோடி செலவில் சுமார் 42.5 மீ உயரம் கொண்ட கண்காணிப்பு கோபுரத்துடன் கூடிய வான் கட்டுப்பாட்டு அறையும் அமைக்கப்பட்டுள்ளது.

இத்தனை சிறப்பம்சங்களைக் கொண்டுள்ள இந்த புதிய முனையம் ஜனவரி 2 ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்கவுள்ளார்.

இது தொடர்பாக ஆலோசனைக்கூட்டமும் நடைபெற்றது. மேலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மாநகர காவல் ஆணையர் காமினி தலைமையில் காவல்துறையினர் கடந்த இரண்டு நாள்களாக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்..

இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் புதிய விமான நிலைய முனையத்திற்கு வர இருப்பதால் அதற்கான முன்னேற்பாடுகள் பணிகள் குறித்து நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு விமான நிலைய அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்..

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் மாநகர காவல் ஆணையர் காமினி மாநகராட்சி ஆணையர் வைத்திநாதன் மாநகராட்சி மேயர் அன்பழகன் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

**அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!**

புதிய முனையத்தை நேரில் பார்வையிட்ட பிறகு அமைச்சர் கே.என். நேரு பேட்டி வருமாறு:-

திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் புதிய முனையம் கட்ட இந்திய விமான நிலைய ஆணையக் குழுமம் ரூ.951 கோடி ஒதுக்கீடு செய்தது இதனைத் தொடர்ந்து கடந்த 2019 ம் ஆண்டு கட்டுமானப் பணிகள் துவங்கி நடைபெற்று வந்தது. ஆனாலும் கூடுதல் செலவினமாக ரூ.249 கோடி என மொத்தம் ரூ. 1200 கோடி மதிப்பிட்டில் கட்டுமானப் பணிகள் நிறைவுற்ற நிலையில் புதிய முனையம் திறப்பு விழா காண உள்ளது.

புதிய முனையை திறப்பு விழாவில் பாரத பிரதமர் மோடி கலந்து கொள்ள வாய்ப்புள்ளதாக நேற்று அண்ணாமலை தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் புதிய முனையத்தை நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன் பிறகு செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமைச்சர் கே.என். நேரு:

வரும் இரண்டாம் தேதி புதிய முனையம் திறக்கப்பட உள்ளதாக செய்திகள் வெளியாகி வருகிறது.

திறப்பு விழாவில் தமிழக முதல்வர் ஸ்டாலின் பங்கேற்க உள்ளார்.

எனவே அவரது வருகைக்கான ஏற்பாடுகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ததாக தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் மாநகர காவல் ஆணையர் காமினி மாநகராட்சி ஆணையர் வைத்தியநாதன் உடன் இருந்தனர்

14 ஆண்டுகளுக்குப் பிறகு

# கன்னிவாடி நாயோடை நீர்த்தேக்கம் தூர்வாரப்படுகிறது!

## அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு விவசாயிகள் நன்றி!

திண்டுக்கல், டிச.27-

14 வருடங்களுக்கு பிறகு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவால் கன்னிவாடி நாயோடை நீர்த்தேக்கம் தூர்வாரப்படுவதற்கு கன்னிவாடி பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கன்னிவாடி அருகே உள்ள மேற்கு தொடர்ச்சி அடிவாரப்பகுதியில் அமைந்துள்ளது கன்னிவாடி நாயோடை நீர்த்தேக்கம். சுமார் 74 ஏக்கர் நிலப்பரப்பு உள்ள (30 ஹெக்டர்) இந்த நீர்த்தேக்கம் கடந்த 14 ஆண்டுகளுக்கு முன்பு தி.மு.க. ஆட்சியின் போது முப்பெருந்துறை அமைச்சராக இருந்து இ.பெரியசாமி அவர்களின் ஏற்பாட்டின் படி கட்டப்பட்டு, பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த துரைமுருகன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. ஒவ்வொரு முறை மழைவரும் போதும் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் தேங்கி நிற்கும் போது இப்பகுதியில் உள்ள சுமார் 500க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்புள்ள விவசாயிகள் பயனடைந்து வந்தனர். கடந்த 8 வருடத்திற்கு மேலாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் கன்னிவாடி நாயோடை நீர்த்தேக்கத்தைப் பற்றி கண்டுகொள்ளாததால் நீர்த்தேக்கம் குட்டிச்சுவராய் மாறி உள்ளது. நீர்த்தேக்கம் முழுவதும் முட்செடிகள், பக்கவாட்டு சுவர் முழுவதும் செடிகொடிகள் படர்ந்து புதர் போல காட்சியளிக்கிறது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் போது பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத் துறை சார்பாக முதலமைச்சரின் குடிமராமத்து திட்டம் 2019-2020 ன்படி கண்மாயில் மதகு, கலிங்கு பழுதுபார்த்தல், மிகைநீர் வாய்க்கால் தூர்வார்தல், கரையை பலப்படுத்தும் பணி உட்பட பல்வேறு பணிகளுக்கு சிரங்காடு நீரினை பயன்படுத்து வோர் சங்கத்திற்கு தமிழக அரசு ரூ.25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்திருந்தது. இந்த நிதியை முறையாக செயல்படுத்த விடாமல் அரசியல் தலையீடு காரணமாகவும், தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட நீர்த்தேக்கம் என்பதாலும் அப்படியே கிடப்பில் போட்டு விட்டனர். தற்போது பாலைவனம் போல் கன்னிவாடி நாயோடை நீர்த்தேக்கம் காட்சியளிக்கிறது. தற்போது தமிழகம் முழுவதும் வெள்ளக்காடாய் மாறி மழை தண்ணீர்; குளங்கள் மற்றும் நீர்தேக்கங்களுக்கு சென்று தண்ணீர் மறுகால் செல்லும் நிலையில் கன்னிவாடி நாயோடை நீர்தேக்கத்தில் ஒருசொட்டு தண்ணீர் கூட இல்லாதது கன்னிவாடி பகுதி பொதுமக்களையும், விவசாயிகளையும் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. கன்னிவாடி பாசன விவசாயிகளின் நலன் கருதி தமிழக ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தமிழ்நாட்டிலே முதன் முறையாக பேரூராட்சிகளில் நூறு நாள் வேலை திட்டத்தை கொண்டு வந்துள்ளார். அகரம் பேரூராட்சி பகுதியில் இத்திட்டம் செயல்பட்டு வரும் நிலையில் கடந்த 22.12.2023ம் தேதி கன்னிவாடி பேரூராட்சி பகுதியில் தமிழ்நாடு நகர்புற வேலைவாய்ப்பு திட்டம் 2023-24ன் படி பயனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்கினார். 1900பேர் பதிவு செய்ததில் 1500க்கும் மேற்பட்ட பெண்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது. முதல் வேலையாக கன்னிவாடி நாயோடை அணைக்கட்டு சர்வே எண்.80ல் குளத்தை தூர் வாறுதல் மற்றும் ஆழப்படுத்துதல் பணிக்கு ரூ.18 லட்சமும், மணியக்காரன்பட்டி துர்கை அம்மன் குளத்தை தூர்வாரும் பணிக்கு ரூ.6 லட்சத்து 80 ஆயிரமும், நவாப்பட்டி பஞ்சந்தாங்கி கரை முதல் சொக்கலிங்கம் புதூர் வரை நீர்வரத்து வாய்க்காலை தூர்வாரும் பணிக்கு ரூ.14.40 லட்சமும் கன்னிவாடி பேரூராட்சி வளமீட்பு பூங்கா அருகே உள்ள வாய்க்காலை தூர்வாரும் பணிக்கு ரூ.1.40 லட்சமும் ஆக மொத்தம் 40 லட்சத்தி 60 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். கன்னிவாடி நாயோடை நீர்த்தேக்கத்தில் ஒரு சொட்டு தண்ணீர் கூட இல்லாத நிலையில் தங்கள் வாழ்வாதாரம் காக்க தமிழ்நாடு நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டம் மூலம் கன்னிவாடி நாயோடையை தூர்வார நடவடிக்கை எடுத்து வரும் ஊரக வளர்ச்சித் துறை ஐ. பெரியசாமிக்கு கன்னிவாடி பாசன விவசாயிகள் மற்றும் ரெட்டியார்சத்திரம் தெற்கு பகுதி பாசன விவசாயிகள் மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளனர். இது குறித்து ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கூறுகையில் கடந்த 14 வருடங்களுக்கு முன்பு தி.மு.க. ஆட்சியின் போது சிறுமலை அடிவார கிராமங்களில் உள்ள விவசாயிகளின் நலன் கருதி வெள்ளோடு பகுதியில் ராமக்கால் ஆணை விழுந்தான் ஓடை நீர்த்தேக்கமும் கன்னிவாடி பகுதி மக்களுக்காக மேற்கு தொடர்ச்சி அடிவார பகுதியில் நாயோடை நீர்த்தேக்கமும் கட்டப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சியின் போது கொண்டுவரப்பட்ட நீர்த்தேக்கம் என்பதால் அ.தி.மு.க. ஆட்சியில் கண்டு கொள்ளவில்லை. நீர்த்தேக்கம் பாழடைந்து வரும் நிலையில் தற்போது நீர்த்தேக்கம் தூர்வாரப்படுவதால் மழைநீர் தேங்கி நிற்பதோடு கன்னிவாடி பகுதி விவசாயிகளுக்கும் நீர் ஆதாரம் கிடைக்கும் என்றார்.



நெல்லையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரண உதவிகளை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் வழங்கினார். உடன் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா,நெல்லை மேயர் சரவணன் மத்திய மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான்மைதீன், உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

# வேளச்சேரியில் நிவாரண உதவிகள்!

சென்னை, டிச.27-

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி 176வது வார்டில் புயல்,மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று (26.12.2023 செவ்வாய்க்கிழமை) காலை 9 மணி அளவில் மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும்,176 வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி வே.ஆனந்தம் செய்துள்ளார்.



நெல்லையில் பெய்த கனமழை காரணமாக வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நெல்லை மத்திய மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பில் வண்ணாரப்பேட்டையில் பொதுமக்களுக்கு மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன்,மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் நிவாரணப் பொருட்களை வழங்கினர்.உடன் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா,மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,மகளிர் அணி நிர்வாகிகள் அனித்தா,ஜூலியட், ரேவதி அசோக்,ஹமிதா,உள்பட அணி நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு நகரக் கழக செயற்குழுக் கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமானப் பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமானகே.ஆர்.என்.இராஜேஸ்குமார்தலைமைதாங்கிசிறப்புரையாற்றினார். கூட்டத்தில் நாமக்கல் எம்.எல்,ஏ ராமலிங்கம், மாநில நிர்வாகிகள் ப.ராணி, நக்கீரன், மாவட்ட அவைத் தலைவர் மணிமாறன், தெற்கு நகர செயலாளர் ராணா ஆனந்த், கிழக்கு நகர செயலாளர் செ.பூபதி, மேற்கு நகர செயலாளர் அ.சிவக்குமார், நகர் மன்றத்தலைவர் து.கலாநிதி மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், நகரமன்ற உறுப்பினர்கள் நகர கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சென்னையில் மருத்துவ முகாம்!

சென்னை, டிச. 27 -

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு60க்குட்பட்ட அன்னை சத்யா நகரில் நடைபெற்ற மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினையும், கொசுத்தடுப்பு நடவடிக்கைகளையும், கூடுதல் தலைமைச் செயலாளர், ஆணையாளர் டாக்டர்.ராதா கிருஷ்ணன் நேற்று முன்தினம் (25.12.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொது மக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

இதனை தொடர்ந்து அப்பகுதியில் உள்ள பொதுமக்களிடம் கலந்துரையாடி கொசு தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

பின்னர் கூடுதல் தலைமைச் செயலாளர், ஆணையாளர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்ககளின் அறிவுறுத்துதலின்படி, மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள மீட்பு மற்றும் நிவாரணப் பொருட்கள் உள்ளிட்ட நடவடிக்கைகள், கனமழைக்கு பின்பு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளான மருத்துவ முகாம்கள், மழைநீர் வடிந்த பகுதிகளில் சுத்தம் செய்யும் பணிகள் போன்றவற்றில் தனி கவனம் செலுத்தி கண்காணிக்க அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

மிக்ஜாம் புயல் மற்றும் கனமழைக்கு பிறகு எந்தவொரு தோற்று நோயும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் பொதுமக்கள் அணைவரும் கவன குறைவாக இருக்கக் கூடாது என்ற காரணத்தினால் இந்த மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



நாமக்கல் மாவட்டம். எளச்சிபாளையம் ஒன்றியம் மற்றும் குமாரபாளையம். பள்ளிபாளையம் நகராட்சிகளில் ரூ.5.59 கோடி மதிப்பீட்டில் 6 புதிய திட்டப்பணிகளுக்கு தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். இந்நிகழ்வுகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா. நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில். நகரமன்றத் தலைவர்கள் த.விஜய்கண்ணன். மோ.செல்வராஜ். ஒன்றிய செயலாளர்கள் எம்.தங்கவேல். செல்வம். நாச்சிமுத்து, இளங்கோவன், நகரச் செயலாளர்கள் அ.குமார், ஞானசேகரன், அ.ரவிச்சந்திரன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை – திருமயம் ஒன்றியத்தில்

# வேலைவாய்ப்பு முகாமில் தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணை!

## அமைச்சர் எஸ்.ரகுபதி – கே.கே.செல்லப்பாண்டியன் வழங்கினர்!

புதுக்கோட்டை, டிச. 27 -

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், செந்தூரன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக/ நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற, சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழாவினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி (23.12.2023) அன்று குதுவக்கி வைத்து, முகாமில் பங்கேற்று தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் மற்றும் மகளிர் திட்டத்தின் சார்பில் இலவச திறன் பயிற்சிக்கான சான்றிதழ்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வு, மாவட்ட வருவாய் அலுவலர் மா. செல்வி தலைமையில் நடைபெற்றது.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இளைஞர்கள், மாணவ, மாணவிகளின் நலனிற்காக எண்ணற்ற பல்வேறு சிறப்பான திட்டங்களையும், வேலைவாய்ப்பு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் தமிழகம் முழுவதும் 100 சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்திட அறிவுறுத்தப்பட்டது. அந்தவகையில் திருமயம் ஊராட்சி ஒன்றியம், செந்தூரன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழா துவக்கி வைக்கப்பட்டது.

இம்முகாமில் தொழில் துறை, சேவைத்துறை, விற்பனைத்துறை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த 104க்கும் மேற்பட்ட தனியார்துறை நிறுவனங்கள் கலந்துகொண்டு தகுதியுள்ள நபர்களை வேலைக்கு தேர்ந்தெடுக்க உள்ளனர். அயல்நாட்டு வேலை வாய்ப்பிற்கான பதிவு வழிகாட்டல், சுயதொழில், வங்கி கடன் உதவிகள் மற்றும் அரசின் திட்டங்கள் குறித்து பிரத்தியேக அரங்கம் அமைத்து ஆலோசனை அளிக்கப்படுகிறது. மேலும், மாவட்டத்தில் உள்ள திறன் பயிற்சி நிறுவனங்கள் கலந்து கொண்டு இலவச திறன் பயிற்சிக்கு ஆட்களை தேர்வு செய்து ஆணைகள் வழங்கப்படுகிறது.

இத்தனியார்துறை முகாமில் எட்டாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு மற்றும் ஐ.டி.ஐ. டிப்ளமோ, பி.இ. நர்சிங் படிப்புகள் போன்ற கல்வித்தகுதியுடைய 18 முதல் 40 வயதிற்குட்பட்ட வேலைநாடும் இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி இளைஞர்களும் பங்கேற்று, தங்களது தகுதிகளுக்கேற்ப பணிநியமனங்களை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

எனவே இளைஞர்கள், மாணவ, மாணவிகள் அனைவரும் இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாம்களை உரிய முறையில் பெற்று தங்களது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலா முத்து, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (பொது) மோ.மணிகண்டன், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் (தொ.வ) பெ.வேல்முருகன், உதவி திட்ட அலுவலர் கே.தில்லைமணி, செந்தூரன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மேலாண்மை இயக்குநர் ஆர்.வயிரவன், முதன்மை செயல் அதிகாரி முனைவர்.ஏ.வி.எம்.எஸ்.கார்த்திக், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், வட்டாட்சியர் புவியரசன், கணேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## கடந்த இரண்டு ஆண்டுகளில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்த சாதனைகளை மக்களிடம் எடுத்துரைப்போம்!

## கழகச் செயற்குழுக் கூட்டத்தில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வலியுறுத்தல்!

நாமக்கல், டிச. 27 -

நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு நகரக் கழக செயற்குழு கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமானப் பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற்றது. நாமக்கல் தெற்கு நகரக் கழகச் செயலாளர் ராணா ஆனந்த் வரவேற்றார்.

நாமக்கல் எம்.எல்.ஏ. ராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் மணிமாறன், கிழக்கு நகரச் செயலாளர் செ.பூபதி, மேற்கு நகரச் செயலாளர் அ.சிவக்குமார், நகர் மன்றத் தலைவர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமைதாங்கி பேசியதாவது,

நாமக்கல் நகரில் கடந்த இரண்டரை ஆண்டுகளில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் செய்யப்பட்டுள்ளது. புதிய பேருந்து நிலையம், புதிய புறவழிச்சாலை, புதிய ஆவின் பால்பண்ணை போன்றவை கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியும் விரைவில் நாமக்கல்லில் அமைக்கப்படும். நகரப் பகுதி மட்டுமல்லாது கிராமப்பகுதிகளிலும் சாலை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. வரும் 2024 ல் நாடாளுமன்ற தேர்தல் வர உள்ளது. நாம் நகரில் செய்துள்ள பணிகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். பல்வேறு மக்கள் நலப் பணிகள் செய்துள்ளதால், நகர்மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மக்களை சந்தித்து நாம் என்ன செய்துள்ளோம் என்பதை சொல்லும் ஆற்றல் ஒவ்வொரு தி.மு.க.வினருக்கும் இருக்கிறது.

நாமக்கல் நகராட்சி விரைவில் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட உள்ளது. அப்போது, நகரம் விரிவாக்கம் செய்யப்படும். நாமக்கல் நகர தி.மு.க.விற்கென தனியாக அலுவலகம் இல்லை. இதனால், கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய நகரங்கள் தனித்தனியே வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. நாமக்கல் நகர தி.மு.க.வுக்கு சொந்த கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்படும். நாமக்கல் நகரில் உள்ள வார்டுகளில் செய்ய வேண்டிய பணிகள் குறித்து நகர்மன்ற உறுப்பினர்கள், நகர்மன்ற தலைவர், நகரச் செயலாளர்கள் ஆலோசித்து அந்த பணிகளை விரைவாக செய்து கொடுக்க வேண்டும்.

இவ்வாறு இராஜேஸ்குமார் எம்.பி. பேசினார்.

கூட்டத்தில் நாமக்கல் நகர தி.மு.க.விற்கென தனியாக அலுவலகம் இல்லை. இதனால், நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய நகரங்கள் தனித்தனியே வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறும்போது தனியாக கூட்டம் நடத்த இடமில்லை. ஏற்கெனவே, மாவட்ட செயலாளராக இருந்த கே.கே.வீரப்பன், நாமக்கல் கோட்டை பகுதியில் உள்ள திருப்பாக்குளத் தெருவில் பழைய சர்வே எண் 355/222 என்ற இடம் வாங்கப்பட்டது. மொத்தம் 2,384 சதுர அடி கொண்ட அந்த நிலம் தற்போது செ.காந்திச்செல்வன், செ.மோகன்குமார், செ.வளர்மதி, செ.சுரேஷ் ஆகியோரது பெயரில் உள்ளது. அந்த இடம் இன்னும் பொதுச் செயலாளர் பெயருக்கு மாற்றம் செய்யப்படவில்லை. அதனால் அந்த இடத்தை பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. மாவட்ட திமுக சார்பில் அதற்கான முயற்சி எடுத்து அந்த இடத்தை பொதுச்செயலாளர் பெயரில் பத்திரப்பதிவு செய்து அங்கு ஒருங்கிணைந்த நாமக்கல் நகர தி.மு.க. அலுவலகம் கட்ட மாவட்டச் செயலாளர் அனுமதி பெற்றுத் தர வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரத்தில் பரமத்தி சாலையில் செலம்பகவுண்டர் பூங்கா அருகில் முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களின் முழு திருஉருவச்சிலை அமைக்கவும், நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரில் புதிய பேருந்து நிலையம் அமையவும், நாமக்கல் நகர புறவழிச்சாலை அமையவும், நாமக்கல் நகரின் புதிய சந்தை வணிக வளாகம் அமையவும், அனுமதி வழங்கிய கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர்கள் கே.என்.நேரு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், எ.வ.வேலு, டாக்டர். மா.மதிவேந்தன், மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் ஆகியோருக்கு நாமக்கல் மக்களின் சார்பாக நன்றியினை தெரிவித்து கொள்வது,

தொடர்ந்து பெய்து வந்த மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்ட மக்களுக்கு தேவையான மீட்பு பணிகளை மேற்கொண்ட நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கூட்டத்தில் ப.ராணி, இரா.நக்கீரன், ராஜகோபால், சி.விஸ்வநாத், மருத்துவர் தீபக்குமார், கிருபாகரன், நாசர் பாஷா, சுரேஷ்குமார், முரளி, ராஜவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக நகர துணைச் செயலாளர் புவனேஸ்வரன் நன்றி கூறினார்.

# ‘கலைஞர் 100’ விழா நடைபெறும் இடம் மாற்றம்!

சென்னை, டிச.26

கலைஞர் 100 நிகழ்ச்சி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் அடுத்த மாதம் 6ஆம் தேதி நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

தமிழ்நாடு திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் சார்பாக திரை பிரபலங்கள் முன்னெடுக்கும் கலைஞர் 100 நிகழ்ச்சி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் அடுத்த மாதம் 6ஆம் தேதி நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், விழா நடைபெறும் இடம் மாற்றப்பட்டு, சென்னை கிண்டியில் உள்ள ரேஸ் கோர்ஸ் திறந்தவெளி மைதானத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாகூர் ஆண்டவர் தர்கா 467 ஆம் ஆண்டு கந்தூரி விழா!

## அமைச்சர் கே.எஸ்.செஞ்சிமஸ்தான் – என்.கௌதமன் பங்கேற்பு!

நாகை, டிச. 27 -

உலக புகழ் பெற்ற நாகை மாவட்டம் நாகூர் ஆண்டவர் தர்கா 467ம் ஆண்டு கந்தூரி விழா கடந்த 14ம் தேதி கொடி ஏற்றத்துடன் தொடங்கியது. சந்தன கூடு மற்றும் சந்தனம் பூசும் விழாவிற்கு தேவையான 45 கிலோ சந்தன கட்டைகளை தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முக்கிய விழாவாக சந்தன கூடு ஊர்வலம் கடந்த 23ம் தேதியும் , சந்தனம் பூசும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்த சந்தன கூடு மற்றும் சந்தனம் பூசும் விழாவில் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கலந்து கொண்டார். அதன் பின் 1500 பேருக்கு அன்ன தானம் வாங்கினார். பின்னர் தர்காவில் நடைபெறும் மராமத்து பணிகளை பார்வையிட்டார்.

பின்னர் நாவர் தர்காவில் சிறுபான்மையின நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் செய்தியாளர்களுக்கு பேட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு பிறகு சிறுபான்மை மக்களுக்கும், தர்காக்களுக்கும், பள்ளி வாசலுக்கும் பாதுகாப்பான நிலையை உருவாக்கி தருகிறார் என்பதை நாம் அறிவோம். தமிழக அரசு சார்பில் ரூ. 10 கோடியை வழங்கி பள்ளி வாசல் பராமரிப்பு பணிக்காக இந்த நிதி ஒதுக்கியுள்ளோம். இதேப்போல் புகழ் பெற்ற தர்காக்களுக்கு தலா ரூ.2 கோடி என்று ரூ.10 கோடி வழங்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக நாகூர் தர்காவிற்கு ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்த பணிகள் முழுமையாக நடைபெற்று வருகிறது. இதேப்போல் தமிழகத்தில் உள்ள புகழ்பெற்ற தர்காக்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய அரசு மு ன்வந்துள்து. தமிழ்நாடு முழுவதும் உள்ள நீண்ட காலமான தேவாலயங்களுக்கும் சிறப்பு திட்டம் ரூ. 10 கோடி விடுவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது 4 தேவாலயங்களுக்கு தலா ரூ.2கோடி ஒதுக்கீடு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 4 தேவாலயங்களுக்கு இதுவரை ரூ. 4 கோடி ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இஸ்லாமியர், கிருஸ்துவர்கள் அடக்கஸ்தலம், கமரஸ்தான் ஆகிய இரண்டிற்கும் சுற்றுச்சுவர் அமைக்க பணியும், கூடுதல் இடத்தினை அரசாங்கம் மூலம் பெற்று தரும் பணியையும் சிறப்பு திட்டமாக செயல்படுத்த தலா ரூ. ஒரு கோடி ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு இடம் என்றால் அந்த இடத்தை பெற்று வழங்கிடுவது, தனியார் இடம் என்றால் அந்த இடத்தை பேச்சுவார்தை மூலம் பெற்று தரப்படும். கிருஸ்துவ தேவாலங்களில் பணியுரியும் உபதேஸ்தவர்களுக்கு பணியாளர்களுக்கு நலவாரியம், பள்ளிவாசலில் பணியாற்றும் உலமாக்களுக்கு ஒய்வூதிய திட்டம், உலமாக்களுக்கு நலவாரியம், ஏழை எளிய பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்க அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்திடவும், சிறுபான்மை மக்கள் தொடர்ந்து கல்வி கற்கவும், 3ம் வகுப்பில் இருந்து 5ம் வகுப்பு 6ம் வகுப்பில் இருந்து 10ம் வகுப்பி படிக்கும் மாணவர்களுக்கு தலா ரூ.500, ரூ,1000 வழங்கப்பட்டு வருகிறது.

புனித ஹச்சு பயணம் மேற்கொள்பவர்களுக்கு ரூ. 5 கோடி வழங்கி பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது. அதுப்போல் கிருஸ்துவ மக்கள் புனித யாத்திரை ஜெர்சலம் செல்வதற்காக கடந்த ஆண்டும், இந்த ஆண்டுக்கும் ரூ 2 கோடியே 32 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கொரோனா காலத்தில் ஜெருசலம் செல்லவில்லை, இந்த ஆண்டு பயணம் மேற்கொள்ளும் நேரத்தில் இஸ்ரேலில் போர் நடக்கும் காரணத்தால் யாரும் செல்ல வில்லை. இருந்தாலும் அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு தனி நபர் ஜெருசலம் செல்ல பதிவு செய்து விட்டு வந்தால் அவர்களுக்கு அரசு மானியம் ரூ. 37,500 வழங்கப்படும். பெண்களுக்கு ரூ. 60 ஆயிரம் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இதை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள அரசின் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. உலமாக்கல் நலவாரியத்தில் உறுப்பினராக உள்ள 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு விலையில்லா மிதி வண்டி வழங்கப்பட்டுள்ளது. நாகூர் பகுதியில் இந்து, முஸ்லீம், கிருஸ்துவர்கள் ஒன்றாக இணைந்து வாழகூடியதை நல்ல நிகழ்வு இந்த மண்ணில் உள்ளது. இதைதான் இந்தியா முழுவதும் பல்வேறு வேற்றுமையகளில் ஒற்றுமை காண வேண்டும் என்பது தான் திராவிட மாடல் ஆட்சியின் நோக்கம். அதுதான் அடித்தலம். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று ஆட்சியை நடத்துகிறார் நம்முடைய முதலமைச்சர். எம்மதமும் சம்மதம், ஒன்றே குலம் ஒருவனே தேவன், ஏழை சிரிப்பில் இறைவனை காண்போம் என் தத்துவம் எல்லா மதத்திலும் இதைதான் சொல்லப்படுகிறது.

வந்தவரை வரவேற்று வாழ வைக்கும் தமிழகம். தமிழக மக்களுக்குஅவர்களின் உரிமைகள் தமிழக மக்கள் வாக்களித்து தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் அந்த அரசாங்கம் நிறைவேற்றும் அந்த திட்டங்களுக்கு ஆளுநர் உடன் அனுமதி வழங்க வேண்டும் என்று தான் நாங்கள் திரும்ப, திரும்ப கேட்கிறோம். மக்களாட்சி தத்துவத்திற்கு இடையூறாக இருக்காதீர்கள், மக்களாட்சி தத்துவத்திற்கு நீங்கள் ஆதரவாக இருங்கள், நீங்களும் மக்களுக்கு ஆதரவாக இருந்து அந்த நல்ல பெயரை எடுத்துக்கொள்ளுங்கள். வெள்ள சேதம் ஏற்பட்டத்தை முதல்வர் இரவு பகலாக சென்று பார்க்கிறார். ஒன்றிய அரசு வழங்க வேண்டிய உரிய தொகை கிடைக்கவில்லை என்று நாங்கள் சுட்டி காட்டுகிறோம்.

இவ்வாறு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அமைச்சருடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம், ஆர்.செந்தில்குமார், நாகூர் தர்கா அறங்காவலர் அலோசனை குழு தலைவர் செய்யது முகமது காமில்சாகிப் இந்து சமய அறநிலையத் துறை மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் நாகரத்தினம் மற்றும் நகரக் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயிலில் தந்தை பெரியார் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சிலைக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், தகவல் தொழில நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஶ்ரீதர் மற்றும் பலர் உள்ளனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கடலாடி அ. பிரணவநாதன்
## டிசம்பர் 27 (2010)



இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியக் கழகச் செயலாளராக இருபது ஆண்டுகள் பணியாற்றியவர்.

ஒரு முறை மாவட்ட துணைச் செயலாளராகவும், இரண்டு முறை தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கடலாடி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றிபெற்று அந்தத் தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.





விடுதலைப் போராட்டத் தியாகியும் முதுபெரும் கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவருமான 'தகைசால் தமிழர்' அய்யா நல்லகண்ணு அவர்களின் 99ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, அவரை அவரது இல்லத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். அப்போது மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரித்த பொருட்களை நல்லகண்ணு அவர்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். அதுபோது விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் உடனிருந்தார்.

### இளைய தலைமுறையினருக்கு விஞ்ஞான வாசலைத் திறந்துவிடும்

# கவிப்பேரரசு வைரமுத்துவின் 'மகா கவிதை'!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜனவரி 1 - அன்று வெளியிடுகிறார்!

சென்னை, டிச. 27 -

கவிப்பேரரசு வைரமுத்துவின் புதிய படைப்பான 'மகா கவிதை' நூலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஜனவரி 1ஆம் தேதி வெளியிடுகிறார்.

இவ்விழா சென்னைக் காமராசர் அரங்கில் மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது. நூலின் முதற்படியை ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் பெற்றுக் கொள்கிறார். கலைஞானி கமல்ஹாசன், விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை இருவரும் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

கவிப்பேரரசு வைரமுத்து ஏற்புரை ஆற்றுகிறார்.

'மகா கவிதை' என்பது நிலம், நீர், காற்று, தீ, வெளி என்ற ஐம்பூதங்கள் பற்றிய ஐந்து நெடுங் கவிதைகளின் பெருந்தொகுப்பு ஆகும். கவிப்பேரரசு வைரமுத்துவின் 30 மாதக் கடும் உழைப்பினால் உருவானது இந்தக் கவிதைநூல்.




**விஞ்ஞான வாசலைத் திறந்துவிடும் 'மகா கவிதை'!**

"அகவியல் - புறவியல் - அறவியல் இறையியல் என்றெல்லாம் பேசிய தமிழ்க் கவிதை முதன்முதலில் முழுக்க அறிவியல் பேசுகிறது. ஐம்பூதங்களின் அறிவியலும் ஈராயிரமாண்டு நீண்டு கிடக்கும் தமிழ்க் கவிதையின் அழகியலும் ஒருங்கிணைந்த பெருங்கவிதை மகா கவிதை. இளைய தலைமுறையின் எதிர்காலத்திற்கு இந்த மகா கவிதை விஞ்ஞான வாசலைத் திறந்துவிடும்" என்று கவிப்பேரரசு வைரமுத்து உறுதிபடத் தெரிவிக்கிறார்.

**ரூ. 5 லட்சம் பரிசு!**

மகா கவிதை என்ற தலைப்பின் ஐந்து எழுத்துக்களிலும் இந்த நூலின் ஐந்து உள்ளடக்கங்கள் மறைந்திருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்துச் சரியான விடை சொல்பவர்க்கு ஐந்து லட்சம் பரிசு என்று கவிப்பேரரசு வைரமுத்து ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

அந்தப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் மேடையிலேயே அறிவிக்கப்படுவார்கள் மற்றும் முதலமைச்சர் கரங்களால் பரிசு பெறுவார்கள்.

கவிப்பேரரசு வைரமுத்துவின் பதிப்பகமான 'சூர்யா இலக்கியம்' இந்நூலை வெளியிடுகிறது. வெற்றித் தமிழர் பேரவைத் தோழர்கள் விழாவிற்கான ஏற்பாடுகளை முனைந்து செய்து வருகிறார்கள்.





தூத்துக்குடி மாவட்டம், ஏரல் பேரூராட்சியில், நேற்று முன்தினம் (25.12.2023), குரும்பல் என்னும் இடத்தில், அதி கனமழை வெள்ளதால் உடைந்த போன பாலத்தையும், சேதமடைந்துள்ள குடிசை வீடுகளையும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின்போது, மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், வணிகவரி பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் மாவட்ட அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.




# திராவிடப் போராளிகள் 48

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## சற்குணபாண்டியன்: திராவிட இயக்க தீபம்..!

1950-களின் தொடக்கத்தில், திராவிட முன்னேற்றக் கழக மேடைகளில் 13 வயது சிறுமி ஒருத்தியின் குரல் ஒலித்தது. கூட்டத்தை வேடிக்கை பார்த்துவிட்டுப் போகும் மனிதர்களைக்கூட, நின்று கேட்கவைத்த இனிமையும் உறுதியும் நிறைந்த குரல். தோற்றத்தில் எளிமை. கருத்திலோ புரட்சி.

‘தமிழச்சியின் கத்தி’ என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதையை எடுத்துக்காட்டி, உரிமைப் போர் முரசாய் முழங்கிய அந்தச் சிறுமிதான் பின்னாளில் இவர் ‘சொல்லின் செல்வி’ என்று பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட சற்குணம் ஆவார்.



ஓவியம் : ரவி பேலட்

1941 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம், தளவாய்புரத்தில் பிறந்த சற்குணம் இளம் வயதிலேயே நினைவாற்றலும் பேச்சுத் திறமையும் வாய்ந்தவர். அவரது தந்தையார் திராவிடர் கழகத்தின் செயல்வீரராகத் திகழ்ந்தவர். தன் மகளை உரிமை உணர்வோடும் அரசியல் தெளிவோடும் வளர்த்தவர். பள்ளியிலும் இலக்கிய மேடைகளிலும் தன் பேச்சாற்றலால் பாராட்டுகள் பெற்ற சற்குணத்தை திராவிட இயக்க மேடைகளில் பேசவைத்தவரும் அவரே.

### மேடையில் மாணவி பேச்சு!

கொள்கையைக் கற்றுக்கொடுக்க வழிகாட்டிகளும், வாய்ப்புக் கொடுக்க பெரியோர்களும் அமைந்ததோடு சற்குணம் என்ற பெண்ணின் கொள்கைப் பற்றும், பேச்சாற்றலும், திராவிட இயக்கப் பற்றாளர்களின் பாராட்டைப் பெற்றது. அதனால், அவரை தமிழ்நாட்டின் பல பகுதிகளில் அழைத்துப் பேச செய்தார்கள்.

பள்ளி மாணவியின் மேடை முழக்கங்கள் தலைவர்கள் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டன. மிக விரைவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்னிலையில், பேசும் வாய்ப்பு சற்குணத்துக்குக் கிட்டியது. அதுவும் எப்படிப்பட்ட ஒரு வரலாற்று நிகழ்ச்சி.

1956 ஆம் ஆண்டு அக்டோபர் 11 ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் மன்றம் சத்திய வாணிமுத்து அம்மையாரின் தலைமையில், முறைப்படி செயல்படத் தொடங்கியது. பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்த்துரையோடு நிகழ்ந்த அந்த மகளிர் மன்றத் தொடக்க விழாவில், தலைமையேற்றவர் டாக்டர் தருமாம்பாள்.

தொடக்க உரை ஆற்றியவர் வெற்றிச்செல்வி அன்பழகன் (பேராசிரியர்), பாராட்டு வழங்கியவர் புவனேசுவரி நடராசன் (என். வி. என்), தொடக்க உரை மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.

சொற்பொழிவாளர்கள் இராணி அண்ணாதுரை, அருண்மொழி வில்வம் என இப்படித் தொடரும் பேராளுமைகளின் பட்டியலில் ‘சற்குணா’ என்று அவர் பெயர் இடம்பெற்றது. அந்த நிகழ்வு முடிந்த பிறகு ‘திராவிடன்’ இதழில் வந்த செய்திக் குறிப்பில் ‘மாணவி சற்குணம்’ பேசினார் என்று குறிப்பிடப்பட்டது.

### மாணவர் போராட்டக் களங்கள்

தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளம் பேச்சாளராகவும், மாணவர் அணியின் செயல்வீரராகவும் செயல்பட்ட சற்குணம் அவர்களின் உரைகள், தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் முக்கியப் பங்கு வகித்தன. பேச்சாளராக மட்டுமன்றி சிறந்த களப்பணியாள ராகவும் சற்குணம் செயல்பட்டார்.

இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கான மாணவர் போராட்டக் களங்களிலும் அவரது குரல் ஒலித்தது. 1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் வென்று, பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வரானார். அதன்பின் திராவிடர் கழக மகளிர் அணியில் சற்குணம் அம்மையார் தீவிரமாகச் செயல்பட்டார்.

1971 ஆம் ஆண்டுச் சென்னை மாநகராட்சிக்கான தி.மு.க.வின் நியமன உறுப்பினராகச் சற்குணம் நியமிக்கப்பட்டார். அவரது சிறப்பான செயல்பாடு கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பாராட்டைப் பெற்றன. அலமேலு அப்பாதுரை போன்ற கழகத்தின் மூத்த பெண் தலைவர்களோடு இணைந்து பணியாற்றிய சற்குணம் அவர்களின் தன்னலமற்ற பணி அவருக்குப் பல பொறுப்புகளைக் கொடுத்தது.

### கழக மகளிர் அணியில்...

திராவிட முன்னேற்றக் கழக மகளிர் அணியின் தலைவராகவும், பின் கட்சிப் பொறுப்புகளில் உயர்நிலைப் பதவியான துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பினையும் பெற்றார். அவரது தலைமையில் தி.மு.க மகளிர் அணி புதிய எழுச்சி யைக் கண்டது. புதிய வரவுகளாக ஆயிரக்கணக்கான பெண்கள் கழக மாநாடுகளில் பங்கேற்றனர். பேரணிகளில் எழுச்சியுடன் முழக்கமிட்டனர். மாநாடுகளில் பெண்களே பங்கேற்கும் பட்டிமன்றங்களை நடத்தி, அதில் அவர் நடுவராக இருந்து இலக்கியம், அரசியல் எனச் சுவைபட உரையாற்றினார்.

டாக்டர் தர்மாம்பாள் நூற்றாண்டு விழாவை கலைஞர் அவர்கள் பாராட்டும்படி நடத்தியதோடு உலக மகளிர் தின விழாக்களையும் நடத்தி தி.மு.க மகளிர் அணித் தோழர்களுக்குப் புதிய செய்திகளை அறிந்து கொள்ளவும் பேசவும் வாய்ப்புகளை உருவாக்கினார்.

### மகளிர் ஆணையத் தலைவராக...

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் தோற்றாலும், அவசரநிலை உள்ளிட்ட அடக்குமுறை களை எதிர்கொண்ட போதும், தன் நிலையை மாற்றிக்கொள்ளாத உறுதியான தொண்டராக வாழ்ந்து காட்டினார் சற்குணம். அவரது தன்னலம் கருதாத தொண்டு அவருக்கு, 1989-இலும் 1996-இலும் சட்டமன்ற உறுப்பினராகும் வாய்ப்பைக் கொடுத்தது. மக்களிடம் அவர் பழகிய முறையும் எளியவர்களிடம் காட்டிய அன்பும் மாறாத கொள்கையும் அவருக்கு வெற்றியைக் கொடுத்தன.

திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் சமூகநலத்துறை அமைச்சராகப் பணியாற்றிய போதும் பின் தமிழ்நாடு மகளிர் ஆணையத் தலைவராக நியமனம் பெற்ற போதும், தனது துறை சார்ந்த அதிகாரங்கள் மூலம் தமிழ்நாட்டுப் பெண்களுக்கு நலத்திட்டங்கள் முறையாகக் கிடைப்பதற்கும் பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்கும் அவர் மேற்கொண்ட முயற்சிகள் மிகச் சிறப்பானவை.

தந்தை பெரியாரின் கொள்கை வழியில் எப்போதும் விலகாத பற்றுடையவராக சற்குணம் அம்மையார் வாழ்ந்தார். திராவிடர் கழக மாநாடுகளிலும் அவரது சீர்திருத்த சிந்தனைகள் ஒலித்தன.

### கழகத் துணைப் பொதுச்செயலாளராக

திருமணத்துக்குப் பிறகு தனது பொது வாழ்வில் எவ்வித சரிவும் ஏற்படாமல் இருக்கக் குடும்பப் பொறுப்புகளோடு இயக்கப் பணிகளையும் தொய்வின்றித் தொடர்ந்தார்.

அவரது கணவர் பாண்டியன், மகன்கள் முத்து சோழன், குணசேகரன் எனக் குடும்பத்தினர் அனைவரும் சற்குணம் அம்மையாரின் அரசியல் பொது வாழ்க்கைக்குத் துணையாக இருந்தனர். மேலும் சற்குணம் அம்மையாரின் மருமகள் சிம்லா முத்து சோழன் சென்னை ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தேர்தலில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தேர்தலில் போட்டியிட்டார்.

அம்மையாரின் தொண்டினைப் பாராட்டி, கலைஞர் அவர்களால் 1990 ஆம் ஆண்டு அவருக்கு ‘கலைஞர் விருது’ வழங்கப்பட்டது. அதுமட்டுமா 14.8.2016 ஆம் ஆண்டு அம்மையார் உடல்நலக்குறைவால் மறைந்த போது ‘எனக்கு நானே ஆறுதல் சொல்லிக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறேன்’ என்று அந்த சின்னஞ்சிறுமியாக தி.மு.க. மேடையில் வலம் வந்த சற்குணம் பெற்ற வெற்றிகளையும் சாதனைகளையும் நினைவுகூர்ந்து ‘திராவிட இயக்கத்தின் தீபமாய் மாதர் குலத் திலகமாய் விளங்கிய சற்குணம் நம்மை விட்டுச் சென்றுவிட்டார்’ என்று குறிப்பிட்டார்.

மாணவி சற்குணமாகத் தன் பொதுவாழ்வைத் தொடங்கித் தி.மு.க.வின் துணைப் பொதுச்செய லாளராக உயர்ந்து, சாதனைகள் புரிந்த சற்குணப் பாண்டியன் அம்மையார் மறைந்த பின்பு, 2018 ஆம் ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மண்டல மாநாட்டின் கொடி மேடைக்கு ‘சற்குணபாண்டியன் நினைவு கொடிமேடை’ என்று பெயரிட்டார், இன்றைய முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள்.

பெண்ணுரிமை என்பது திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும். அதனால்தான் சுயமரியாதை இயக்கம் தோன்றிய காலம் முதல் ஆண்களுக்கு நிகராக எழுத்திலும் பேச்சிலும் போராட்டங்களிலும் பெண்களின் பங்களிப்பு தொடர்ந்து இருந்து வருகிறது. அந்தத் தொடர் வரலாற்றில் 62 ஆண்டுகள் அயராது பங்காற்றிய, ‘திராவிடப் போராளி சற்குணம்’ என்பது அவரது தனிச்சிறப்புடைய வரலாறாகும்.

(வருவார்கள்...)

## பெரியாரை நினைப்பது, வாழ்நாள் கடமை!

‘திராவிட ஆய்வு’ என்கிற சமூக வலைதளப் பக்கத்தில் ‘பெரியார் நிகழ்த்திய புரட்சி’ என்கிற வகையில், பதிவிடப்பட்டிருந்த கருத்துகளில் கவனம் பெற்றது இது. “பிராமணப் பெண்ணான எனக்கு, ஏன் பெரியாரைப் பிடித்தது? அப்படி பார்ப்பன பெண்களுக்கு என்ன செய்துவிட்டார்?” என ஒரு பெண் கேள்வி எழுப்பிப் பதிலும் அளித்துள்ளார்.

“பெரியாரின் மூலம் பிராமணப் பெண்கள் நிறையவே பலன் அடைந்துள்ளனர்.அந்தக் காலத்தில் ‘மொட்டைப் பாப்பாத்தி’ என்ற கிண்டலான சொல்லாடல் இருந்தது. முக்கியமாக, பார்ப்பனப் பெண்கள் தன்னுடைய கணவனை இழந்த பிறகு மொட்டை அடித்து வீட்டின் ஓரமாக உட்கார வைத்துவிடுவார்கள். அது பல வருடங்களாக வழக்கத்தில் இருந்தது. பெரியாருடைய பெண் விடுதலைப் போராட்டத்துக்குப் பின் இந்த வழக்கம் முழுவதுமாக தமிழ்நாட்டில் இருந்து கைவிடப்பட்டது.

அது மட்டும் இல்லாமல், மநுஸ்மிருதியின் படி பெண்களுக்கு சொத்தில் சம உரிமை தரக்கூடாது என்றும், அவர்களை மாதவிடாயின் போது ஒதுக்கி வைக்க வேண்டும் என்ற வழக்கங்களை, பார்ப்பன ஆண்கள் அவர்களுடைய வீட்டுப் பெண்களிடம் காண்பித்து வந்தனர். பெண்கள் அடக்குமுறை உள்ள காலகட்டத்தில், மறுமணம் என்பது நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்குக் கடினமான ஒன்றாக இருந்துள்ளது.

‘கருத்தடுப்பு’, ‘பெண்கள் கல்வி’, ‘தேவதாசி முறை’ அனைத்துமே சாஸ்திரத்தின் மூலம் பிராமணப் பெண்களை ஒடுக்கி வைத்தன. பின் பெண்கள் அடிமைத்தனத்துக்கு எதிரான பெரியாரின் எதிர்ப்புக் குரல், கண்டிப்பாக பார்ப்பன பெண்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக இன்றளவும் இருந்துவந்துள்ளது.

பெரியார், கடைசிவரை பெண்களுக்கான முற்போக்கு சிந்தனை மற்றும் செயல்களை முன்னெடுத்தார்.

தற்பொழுது தமிழ்நாட்டில் பெண்களால் படிக்க முடிகிறது என்றால், அதற்கு பெரியாருடைய பங்கு கண்டிப்பாக உண்டு. அதற்கு வாழ்நாள் முழுக்கக் கடமைப்பட்டுத்தான் உள்ளோம்” என்கிறது, அந்தப் பதிவு.

## :ப்ளாஷ்பேக்



### பேசாதீர்... நடியுங்கள்..!

1996 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் ‘முரசொலி’ நாளிதழில் ‘ஆண்டியும் - போண்டியும்’ என்ற நகைச்சுவைப் படைப்பை, தொடராக எழுதி வந்தார். அந்த நகைச்சுவைத் தொடரை நாடகமாக நானும், கவிஞர் சிங்கார சடையப்பனும் தலைவர் கலைஞர் மற்றும் பேராசிரியர் ஆகியோர் முன்னிலையில் அண்ணா அறிவாலயத்தில் அரங்கேற்றம் செய்து கட்டினோம். அப்போது பேச்சாளர்களான எங்களை, ‘மேடைகளில் பேசுவதை நிறுத்திவிட்டு, இந்த நாடகத்தையே இருவரும் தமிழ்நாடெங்கும் நடித்துக் காட்டுங்கள்’ என்று அறிவுறுத்தினார். அப்படியான சமயத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.



நன்மாறன்

**-கவிஞர் நன்மாறன், மாநிலத் துணைச் செயலாளர், கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை, மற்றும் கழகப் பேச்சாளர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

**கருவூலம்**

### பெரியாருடன் போராட்டக் களம்

**1952-இல் இந்தியை நாட்டின் அதிகாரப்பூர்வ அலுவல் மொழியாக்கும் முயற்சியில் இந்திய அரசாங்கம் ஈடுபட்டது. பெரியாரும் அண்ணாவும் கொதிப்படைந்து போராட்டத்தை அறிவித்தனர். ஈரோட்டில் அண்ணாவும், திருச்சியில் பெரியாரும் போராட்டத் துக்குத் தலைமையேற்றனர். பெரியார் தலைமையிலான திராவிடர் கழக ஊர்வலமும், கலைஞர் தலைமையி லான தி.மு.கழக ஊர்வலமும் திருச்சி தெப்பக்குளம் பகுதியில் சந்தித்தன. பெரியாரும் கலைஞரும் சேர்ந்து திருச்சி ரயில் நிலையத்தில் இந்தி எழுத்துகளை மை பூசி அழித்தனர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 341




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131